இந்திய அரசாங்கம்
சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்

सत्यमेव जयते

# இளைஞர் நீதிச் சட்டம், 1986

(சட்ட எண் 53/1986)
(1992, டிசம்பர் 1 அன்று இருந்தவாறு)

# The Juvenile Justice Act, 1986

(Act No. 53 of 1986)
(As on 1st December 1992)

தமிழாக்கம் :
இந்திய அரசாங்கத்திற்காக
சட்ட (அரசு அலுவல் மொழிப் பிரிவு)த் துறை
சென்னை–28

தமிழ்நாடு அரசாங்க எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.
1997

# இளைஞர் நீதிச் சட்டம், 1986

(சட்ட எண் 53/1986)

# The Juvenile Justice Act, 1986

(Act No. 53 of 1986)

# இளைஞர் நீதிச் சட்டம், 1986

சட்ட எண் 53/1986

பிரிவுகள்

## அத்தியாயம் I

### முன்னுரை


1. குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம் .. .. .. 1
2. பொருள் வரையறைகள் .. .. .. .. .. .. .. 1
3. ஓர் இளைஞராக இருப்பதினின்றும் அற்றுப்போயிருக்கிற இளைஞரைப் பொறுத்த விசாரணையின் தொடர்ச்சி .. .. .. .. 3


## அத்தியாயம் II

### இளையோருக்கான தகுதிறமுள்ள அதிகார அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள்


4. இளைஞர் நலக் குழுமங்கள் .. .. .. .. .. .. 3
5. இளைஞர் நீதிமன்றங்கள் .. .. .. .. .. .. 4
6. நலக்குழுமங்கள் மற்றும் இளைஞர் நீதிமன்றங்கள் தொடர்பான நெறிமுறை முதலியன .. .. .. .. .. .. .. .. 4
7. குழுமத்தின் மற்றும் இளைஞர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் .. .. 4
8. இந்தச் சட்டத்தின்படி அதிகாரமளிக்கப்பெறாத ஒரு குற்றவியல் நடுவரால் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறை .. .. .. .. 5
9. இளைஞர் இல்லங்கள் .. .. .. .. .. .. .. 5
10. சிறப்பு இல்லங்கள் .. .. .. .. .. .. .. 6
11. கூர்நோக்கு இல்லங்கள் .. .. .. .. .. .. .. 6
12. பிற்காப்பு அமைப்புகள் .. .. .. .. .. .. .. 7


## அத்தியாயம் III

### புறக்கணிக்கப்பட்ட இளையோர்


13. குழுமங்களின் முன்பு புறக்கணிக்கப்பட்ட இளையோரை முன்னிலைப் படுத்துதல் .. .. .. .. .. .. .. .. 7
14. புறக்கணிக்கப்பட்ட இளைஞருக்குப் பெற்றோருள்ளபோது பின்பற்றப்பட வேண்டிய சிறப்பு நெறிமுறை .. .. .. .. .. 8
15. புறக்கணிக்கப்பட்ட இளையோர் பற்றி குழுமத்தால் செய்யப்படும் விசாரணை .. .. .. .. .. .. .. 8
16. புறக்கணிக்கப்பட்ட இளைஞரைப் பொருத்தமான பாதுகாவலுக்கு அனுப்புவதற்கு அதிகாரம் .. .. .. .. .. .. .. 9
17. கட்டுக்கடங்காத இளையோர் .. .. .. .. .. .. 9


## அத்தியாயம் IV

### குற்றமிழைத்த இளையோர்


18. இளையோரின் பிணை மற்றும் பாதுகாவல் .. .. .. .. 9
19. பெற்றோர் அல்லது காப்பாளர் அல்லது கண்காணிப்பு அலுவலருக்குச் செய்தி அளித்தல் .. .. .. .. .. .. 10

| பிரிவுகள் | | பக்கம் |
|---|---|---|
| 20. | குற்றமிழைத்த இளையோர் பற்றி இளைஞர் நீதிமன்றத்தால் செய்யப்படும் விசாரணை | 10 |
| 21. | குற்றமிழைத்த இளையோர் பற்றிப் பிறப்பிக்கப்படும் ஆணைகள் | 10 |
| 22. | இளையோருக்கு எதிராகப் பிறப்பிக்கப்படாதிருக்கப்படும் ஆணைகள் | 11 |
| 23. | இளைஞருக்கு எதிரான, குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டத்தின் அத்தியாயம் VIIIஇன்படியான நடவடிக்கை, தகுதிறமுள்ளது அன்று | 12 |
| 24. | இளைஞரையும் ஓர் இளைஞராக இராத ஆளையும் சேர்த்து கூட்டு வழக்கு விசாரணை எதுவும் செய்தல் ஆகாது | 12 |
| 25. | குற்றத்தீர்ப்பைச் சேர்ந்திருக்கும் தகுதிக்கேட்டை அகற்றுதல் | 12 |
| 26. | முடிவுறாநிலையிலுள்ள வழக்குகளைப் பொறுத்து சிறப்பு வகையம் | 13 |


## அத்தியாயம் V

### பொதுவாக, தகுதிறமுள்ள அதிகார அமைப்புகளின் நெறிமுறை மற்றும் அத்தகைய அதிகார அமைப்புகளின் ஆணைகள் மீது மேல்முறையீடுகள் மற்றும் மேலாய்வுகள்


| | | |
|---|---|---|
| 27. | குழுமங்கள் மற்றும் இளைஞர் நீதிமன்றங்களின் அமர்வுகள் முதலியன | 13 |
| 28. | தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பின் முன்பு முன்னிலையாகலாகும் ஆட்கள் | 13 |
| 29. | இளைஞரின் பெற்றோர் அல்லது காப்பாளரின் வருகை | 14 |
| 30. | இளைஞரின் வருகையை வேண்டாமென விட்டுவிடுதல் | 14 |
| 31. | கேடுபயக்கும் நோயால் வருந்துகிற இளைஞரை ஒப்புதலளிக்கப்பட்ட இடத்திற்கு அனுப்புதல் மற்றும் அவரது எதிர்காலத்திற்கு வகை செய்தல் | 14 |
| 32. | வயது பற்றிய துணிபு மற்றும் தீர்மானிப்பு | 14 |
| 33. | இந்தச் சட்டத்தின்படி ஆணைகளைப் பிறப்பிக்கையில் கருதுகைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய சூழ்நிலைகள் | 15 |
| 34. | அதிகாரவரம்புக்கு வெளியே ஓர் இளைஞரை அனுப்புதல் | 15 |
| 35. | அறிக்கைகள் மந்தணமானவையாக எடுத்துக்கொள்ளப்படுதல் | 15 |
| 36. | இந்தச் சட்டத்தின்படி ஏதேனும் நடவடிக்கையில் தொடர்புடையவர்களாயிருக்கும் இளையோரின் பெயர்கள் முதலானவற்றை வெளியிடுவதற்குத் தடை | 16 |
| 37. | மேல்முறையீடுகள் | 16 |
| 38. | மேலாய்வு | 16 |
| 39. | விசாரணைகள், மேல்முறையீடுகள் மற்றும் மேலாய்வு நடவடிக்கைகளில் நெறிமுறை | 17 |
| 40. | ஆணைகளைத் திருத்தம் செய்வதற்கு அதிகாரம் | 17 |


## அத்தியாயம் VI

### இளையோரைப் பொறுத்த தனியுறு குற்றச்செயல்கள்


| | | |
|---|---|---|
| 41. | இளைஞரைக் கொடுமைப்படுத்துவதற்கான தண்டனை | 17 |
| 42. | பிச்சை கேட்டலுக்காக இளையோரை வேலைக்கு அமர்த்துதல் | 17 |
| 43. | ஓர் இளைஞருக்கு வெறியூட்டும் மது அல்லது மயக்கும் மருந்து அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருளைக் கொடுப்பதற்கான தண்டனை | 18 |

| பிரிவுகள் | | பக்கம் |
|---|---|---|
| 44. | வேலைபெறுநர்களான இளைஞர் சுரண்டப்படுதல் | 18 |
| 45. | மாற்றுத் தண்டனைகள் | 18 |


## அத்தியாயம் VII

### பல்வகைப்பட்டவை


| | | |
|---|---|---|
| 46. | இளையோரை விடுவிப்பதற்கும் மாற்றல் செய்வதற்கும் மாநில அரசாங்கத்தின் அதிகாரம் | 18 |
| 47. | இந்தச் சட்டத்தின்படி இளைஞர் இல்லங்கள் முதலியனவற்றுக்கும் இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள ஒத்த தன்மையதான இளைஞர் இல்லங்கள் முதலியனவற்றுக்கும் இடையே செய்யப்படும் மாற்றல்கள் | 19 |
| 48. | மனக்கோளாறு உடைய அல்லது தொழுநோயால் வருந்துகிற அல்லது மருந்துப் பொருள்களுக்கு அடிமையான இளைஞரை மாற்றல் | 19 |
| 49. | உரிமத்தின் பேரில் வெளியே தங்கவைத்தல் | 20 |
| 50. | தப்பியோடிய இளையோரைப் பொறுத்த வகையம் | 20 |
| 51. | பெற்றோர்களால் அளிக்கப்படும் பங்களிப்பு | 21 |
| 52. | நிதியம் | 21 |
| 53. | அறிவுரைக்குழு | 21 |
| 54. | பார்வையாளர்கள் | 22 |
| 55. | இளைஞரின்மீது பொறுப்பாளரின் கட்டுப்பாடு | 22 |
| 56. | இந்தச் சட்டத்தின் தொடக்க நிலையில் தண்டனையை அனுபவிக்கிற குற்றமிழைத்த இளைஞர் ஒருவர் | 22 |
| 57. | அலுவலர்களின் அமர்த்துகை | 22 |
| 58. | இந்தச் சட்டத்தின்படி அமர்த்தப்பட்ட அலுவலர்கள் பொதுப்பணியாளர்களாக இருத்தல் | 23 |
| 59. | முறிகள் பொறுத்தமட்டிலான நெறிமுறை | 23 |
| 60. | அதிகாரங்களை ஒப்படைவு செய்தல் | 23 |
| 61. | நல்லெண்ணத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைக்குப் பாதுகாப்பு | 23 |
| 62. | விதிகள் வகுப்பதற்கு அதிகாரம் | 23 |
| 63. | நீக்கறவு மற்றும் காப்புரைகள் | 24 |

# இளைஞர் நீதிச் சட்டம், 1986

(சட்ட எண் 53/1986)

[1986, டிசம்பர் 1]

புறக்கணிக்கப்பட்ட அல்லது குற்றமிழைத்த இளையோரின் காப்பு, காப்பளிப்பு, நடத்துமுறை, மேம்பாடு மற்றும் மறுவாழ்வுக்காகவும், குற்றமிழைத்த இளையோர் தொடர்பான சில பொருட்பாடுகளின் நீதிமுறைத் தீர்ப்பிற்காகவும் அவர்களின் ஒழுங்கமைப்பிற்காகவும் வகைசெய்வதற்கான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் முப்பத்து ஏழாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக :—

## அத்தியாயம் I

### முன்னுரை

**குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.**

1. (1) இந்தச் சட்டம், இளைஞர் நீதிச் சட்டம், 1986 என்று வழங்கப் பெறும்.

(2) இது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் தவிர, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடும் தேதியன்று செல்லாற்றல் பெறும், மற்றும் இந்தச் சட்டத்தின் வெவ்வேறு வகையங்களுக்காகவும், வெவ்வேறு மாநிலங்களுக்காகவும் வெவ்வேறு தேதிகள் குறித்திடப்படலாம்.

**பொருள் வரையறைகள்.**

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

(அ) ''பிச்சை கேட்டல்'' என்பது—

(i) பாடும், நடனமாடும், குறிசொல்லும், கண்கட்டுவித்தை புரியும் அல்லது உருப்பொருள்களை விற்பனை செய்யும் பாசாங்காகவாயினும் அல்லது பிறவாறாகவாயினும் ஒரு பொது இடத்தில் பிச்சை வேண்டிக்கேட்டல் அல்லது பெறுதல் அல்லது பிச்சை வேண்டிக் கேட்கும் அல்லது பெறும் நோக்கத்திற்காக ஏதேனும் தனியார் வளாகங்களில் நுழைதல்,

(ii) பிச்சையை முயன்று பெறும் அல்லது அச்சுறுத்திப்பறிக்கும் நோக்கத்துடன் ஏதேனும் வெம்புண், புண், ஊறு, உடல் ஊனம் அல்லது நோயை, அது தம்முடையதாயினும் அல்லது எவரேனும் பிற ஆள் அல்லது ஒரு விலங்கினுடையதாயினும் அதனை, வெளிப்படுத்துதல் அல்லது பார்வையில் படும்படிக் காட்டுதல்,

(iii) பிச்சை வேண்டிக்கேட்கும் அல்லது பெறும் நோக்கத்திற்காக ஒருவரை ஒரு காட்சிப் பொருளாகப் பயன்படுத்துவதற்கு அனுமதித்தல்,

என்று பொருள்படும்;

(ஆ) ''குழுமம்'' என்பது, பிரிவு 4 இன்படி அமைக்கப்பட்ட ஓர் இளைஞர் நலக் குழுமம் என்று பொருள்படும் ;

104/1956 (இ) ''பரத்தையர் மனை'', ''பரத்தை'', ''பரத்தமை'' மற்றும் ''பொது இடம்'' என்பவை, பெண்டிர், சிறுமியர் பரத்தமைத் தொழில் ஒடுக்குச் சட்டம், 1956இல் முறையே அவற்றுக்குக் குறித்தளிக்கப்பட்ட பொருள்களை உடையன ஆகும் ;

(ஈ) ''தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு'' என்பது, புறக்கணிக்கப்பட்ட இளையோர் தொடர்பாக ஒரு குழுமம் என்றும், குற்றமிழைத்த இளையோர் தொடர்பாக ஓர் இளைஞர் நீதி மன்றம் என்றும் பொருள்படும்; மற்றும் அத்தகைய குழுமம் அல்லது இளைஞர் நீதிமன்றம் எதுவும் அமைக்கப்பட்டிராத விடத்து, ஒரு குழுமம் அல்லது இளைஞர் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துவதற்கு, பிரிவு 7இன் உட்பிரிவு (2)இன்படி அதிகாரமளிக்கப்பெற்ற ஏதேனும் நீதிமன்றத்தை உள்ளடக்கும்;

(உ) ''குற்றமிழைத்த இளைஞர்'' என்பது, ஒரு குற்றச்செயல் இழைத்துள்ளதாகக் காணப்பட்டிருக்கிற ஓர் இளைஞர் என்று பொருள்படும்;

(ஊ) '' தகுந்த ஆள் '' அல்லது '' தகுந்த நிறுவனம் '' என்பது, தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பால் குறித்துரைக்கப்பட்ட வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரில், அவருடைய அல்லது அதனுடைய காப்பு மற்றும் காப்பளிப்பிற்காகக் காப்படைவு செய்யப்பட்ட ஓர் இளைஞரை ஏற்றுக்கொள்வதற்கும் கவனித்துப் பேணுவதற்கும் தகுதிறமுள்ள அதிகார அமைப்பால் தகுந்தவராக அல்லது தகுந்ததாகக் காணப்படும் எவரேனும் ஆள் அல்லது (ஒரு காவல் நிலையம் அல்லது சிறைச்சாலையாக இராத) ஏதேனும் நிறுவனம் என்று பொருள்படும் ;

(எ) ஓர் இளைஞர் தொடர்பாக '' காப்பாளர் '' என்பது, ஓர் இளைஞர் தொடர்பான ஏதேனும் நடவடிக்கையை விசாரணைக்கு எடுத்துக்கொண்டிருக்கிற தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பின் கருத்தில், அந்த இளைஞரை, அப்போதைக்கு, உள்ளபடியான பொறுப்பில் அல்லது அவர்மீது கட்டுப்பாடு கொண்டுள்ள எவரேனும் ஆளை உள்ளடக்கும் ;

(ஏ) '' இளைஞர் '' என்பது, பதினாறு வயது நிறைவெய்திராத ஒரு சிறுவன் அல்லது பதினெட்டு வயது நிறைவெய்திராத ஒரு சிறுமி என்று பொருள்படும் ;

(ஐ) '' இளைஞர் நீதிமன்றம் ''என்பது, பிரிவு 5இன்படி அமைக்கப்பட்ட ஒரு நீதிமன்றம் என்று பொருள்படும் ;

(ஒ) ''இளைஞர் இல்லம்'' என்பது, ஓர் இளைஞர் இல்லமாக பிரிவு 9 இன்படி மாநில அரசாங்கத்தால் நிறுவப்பட்ட அல்லது உறுதிச்சான்றளிக்கப்பட்ட ஒரு நிறுவனம் என்று பொருள்படும் ;

(ஓ) '' மயக்க மருந்துப்பொருள்'' மற்றும் '' மனநிலைக்கு ஊறு செய்யும் பொருள் '' என்பனவ, மயக்க மருந்துப்பொருள்கள் மற்றும் மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருள்கள் சட்டம், 1985இல் முறையே அவற்றிற்குக் குறித்தளிக்கப்பட்ட பொருள்களை உடையனவாகும் ; 61/1985

(ஔ) '' புறக்கணிக்கபபட்ட இளைஞர்'' என்பது,—

(i) பிச்சை கேட்பதாகக் காணப்படுகிற, அல்லது

(ii) ஏதேனும் இல்லம் அல்லது நிலையான குடியிருப்பிடத்தை உடையவராக இல்லாதிருப்பதாக மற்றும் பிழைப்புக்கான எவையேனும் வெளிப்படையான வழிவகை இல்லாதிருப்பதாகக் காணப்படுகிற மற்றும் கைவிடப்பட்டவராக இருக்கிற,

(iii) அந்த இளைஞர் மீது கட்டுப்பாட்டைச் செலுத்துவதற்குத் தகுந்தவராக இல்லாதிருக்கிற அல்லது திறனற்றவராக இருக்கிற ஒரு பெற்றோர் அல்லது காப்பாளரை உடைய, அல்லது

(iv) ஒரு பரத்தையர் மனையில் அல்லது ஒரு பரத்தையுடன் வாழ்கிற அல்லது பரத்தமை நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் இடத்திற்கு அடிக்கடிபோகிற, அல்லது எவரேனும் பரத்தை அல்லது ஒழுக்கங்கெட்ட, குடிவெறியான அல்லது இழிந்தவொரு வாழ்க்கை வாழ்ந்து வருகிற எவரேனும் பிற ஆளுடன் இணைந்திருப்பதாகக் காணப்படுகிற,

(v) ஒழுக்கங்கெட்ட அல்லது சட்டமுரணான நோக்கங்களுக்காக அல்லது மனச்சான்றுக்கு எதிரான தோட்டத்திற்காகத் தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருகிற அல்லது சுரண்டப்பட்டு வருகிற அல்லது பெரும்பாலும் தவறாகப் பயன் படுத்தப்படவிருக்கிற அல்லது சுரண்டப்படவிருக்கிற,

ஓர் இளைஞர் என்று பொருள்படும் ;

(க) '' கூர்நோக்கு இல்லம் '' என்பது, ஒரு கூர்நோக்கு இல்லமாக பிரிவு 11இன்படி மாநில அரசாங்கத்தால் நிறுவப்பட்ட அல்லது ஏற்பளிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனம் அல்லது இடம் என்று பொருள்படும் ;

(கா) ''குற்றச்செயல்'' என்பது, நிகழுறுகாலத்தில் செல்லாற்றலிலுள்ள ஏதேனும் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் என்று பொருள்படும் ;

(கி) ''பாதுகாப்பு இடம்'' என்பது, (ஒரு காவல் நிலையம் அல்லது சிறைச்சாலையாக இராத) எந்த இடத்தின் அல்லது நிறுவனத்தின் பொறுப்பைக் கொண்ட ஆள், ஓர் இளைஞரைத் தற்காலிகமாக ஏற்றுக்கொள்வதற்கும், கவனித்துப் பேணுவதற்கும் விரும்புகிறாரோ அந்த ஏதேனும் இடம்.

அல்லது நிறுவனம் மற்றும் எந்த இடம் அல்லது நிறுவனம் தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பின் கருத்தில், அந்த இளைஞரின் ஒரு பாதுகாப்பு இடம் ஆகலாகுமோ அந்த ஏதேனும் இடம் அல்லது நிறுவனம் என்று பொருள்படும் ;

(கி) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பது, இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும் ;

20/1958 (கு) '' கண்காணிப்பு அலுவலர் '' என்பது, இந்தச் சட்டத்தின்படி அல்லது குற்றவாளிகள் கண்காணிப்புச் சட்டம், 1958இன்படி ஒரு கண்காணிப்பு அலுவலராக அமர்த்தப்பட்ட ஓர் அலுவலர் என்று பொருள்படும் ;

(கூ) ''சிறப்பு இல்லம் '' என்பது, பிரிவு 10இன்படி மாநில அரசாங்கத்தால் நிறுவப்பட்ட அல்லது உறுதிச்சான்றளிக்கப்பட்ட ஒரு நிறுவனம் என்று பொருள்படும் ;

(கெ) இந்தச் சட்டத்தின்படி எவரேனும் பெற்றோர், காப்பாளர், அல்லது பிற தகுந்த ஆள் அல்லது தகுந்த நிறுவனத்தின் காப்பின்கீழ் வைக்கப்பட்ட ஓர் இளைஞர் தொடர்பாக '' மேற்பார்வை '' என்பது, அந்த இளைஞர் முறையாக கவனித்துக்கொள்ளப்படுகிறார் என்றும், அந்தத் தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பால் சுமத்தப்பட்ட வரைக்கட்டுகளுக்கு இணங்கி நடத்தப்படுகின்றன என்றும் உறுதிசெய்யும் நோக்கத்திற்காக ஒரு கண்காணிப்பு அலுவலரால் செய்யப்படும் அந்த இளைஞரின் மேற்பார்வை என்று பொருள்படும்;

2/1974 (கே) இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்ட, ஆனால் பொருள் வரையறை செய்யப்படாத மற்றும் குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 இல் பொருள்வரையறை செய்யப்பட்ட சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் அனைத்தும், அந்தத் தொகுப்புச் சட்டத்தில் முறையே அவற்றுக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள பொருள்களை உடையன ஆகும்.

ஓர் இளைஞராக இருப்பதினின்றும் அற்றுப் போயிருக்கிற இளைஞரைப் பொறுத்த விசாரணையின் தொடர்ச்சி.

3. ஓர் இளைஞருக்கு எதிராக விசாரணை தொடங்கப்பட்டிருந்து, அத்தகைய விசாரணையின்போது அந்த இளைஞர் அத்தகையவராக இருப்பது அற்றுப்போகிற இடத்து, அப்போது, இந்தச் சட்டத்தில் அல்லது நிகழுறு காலத்தில் செல்லாற்றலிலுள்ள ஏதேனும் பிற சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அந்த விசாரணை தொடர்ந்து நடத்தப்படலாம் மற்றும் அத்தகைய ஆள் ஓர் இளைஞராகத் தொடர்ந்திருந்தாற்போன்று, அத்தகைய ஆள் பொறுத்து ஆணைகள் பிறப்பிக்கப்படலாம்.

## அத்தியாயம் II

### இளையோருக்கான தகுதிறமுள்ள அதிகாரஅமைப்புகள் மற்றும் நிறுவனங்கள்

இளைஞர் நலக் குழுமங்கள்.

4. (1) மாநில அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பரப்பிடத்திற்காக, இந்தச் சட்டத்தின்படி புறக்கணிக்கப்பட்ட இளையோர் தொடர்பாக, அத்தகைய குழுமத்திற்கு வழங்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட, அதிகாரங்களைச் செலுத்துவதற்காகவும், கடமைகளை ஆற்றுவதற்காகவும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இளைஞர் நலக் குழுமங்களை அமைக்கலாம்.

2/1974 (2) ஒரு குழுமம், ஒரு தலைவரையும், மாநில அரசாங்கம் அமர்த்துவதற்குத் தக்கதெனக் கருதுகிற பிற உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும், அவர்களில் ஒன்றுக்குக் குறையாதவர் ஒரு பெண்ணாக இருத்தல்வேண்டும்; மற்றும் அத்தகைய உறுப்பினர் ஒவ்வொருவரிடமும், குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன்படியான ஒரு குற்றவியல் நடுவரின் அதிகாரங்கள் உற்றமைந்திருக்கும்.

(3) அந்தக் குழுமம், குற்றவியல் நடுவர்களின் ஓர் ஆயமாக பதவிப்பணியாற்றுதல் வேண்டும், மற்றும் ஒரு பெருநகர்க் குற்றவியல் நடுவருக்கு அல்லது, நேர்வுக்கேற்ப, ஒரு முதல் வகுப்பு நீதித்துறை குற்றவியல் நடுவருக்கு, குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 ஆல் வழங்கப்பட்ட அதிகாரங்கள் உடையது ஆகும்.

**இளைஞர் நீதிமன்றங்கள்**

5. (1) குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 இல்
அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மாநில அரசாங்கம் அதிகாரமுறை
அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்
பட்ட ஏதேனும் பரப்பிடத்திற்காக, இந்தச் சட்டத்தின்படி குற்றமிழைத்த
இளையோர் தொடர்பாக அத்தகைய நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட
அல்லது சுமத்தப்பட்ட, அதிகாரங்களைச் செலுத்துவதற்காகவும், கடமை
களை ஆற்றுவதற்காகவும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இளைஞர்
நீதிமன்றங்களை அமைக்கலாம்.

(2) ஓர் இளைஞர் நீதிமன்றம், மாநில அரசாங்கம் அமர்த்து 2/1974
வதற்குத் தக்கதெனக் கருதுகிற ஓர் ஆயமாக அமைகிற பெருநகர் குற்றவியல்
நடுவர்களின் அல்லது, நேர்வுக்கேற்ப, முதல் வகுப்பு நீதித்துறைக் குற்றவியல்
நடுவர்களின் எண்ணிக்கையைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர்களில்
ஒருவர் முதன்மை குற்றவியல் நடுவராகப் பதவிப்பெயர் குறிக்கப்படுதல்
வேண்டும்; மற்றும் அத்தகைய ஆயம் ஒவ்வொன்றும், ஒரு பெருநகர்
குற்றவியல் நடுவருக்கு அல்லது, நேர்வுக்கேற்ப, ஒரு முதல்வகுப்பு நீதித்
துறை குற்றவியல் நடுவருக்கு குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 2/1974
1973 ஆல் வழங்கப்பட்ட அதிகாரங்கள் உடையது ஆகும்.

(3) இளைஞர் நீதிமன்றம் ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்பட
லாகும் தகுதிப்பாடுகளைக் கொண்டிருக்கும் மதிப்புறு சமூகத் தொண்டர்
கள் இருவர் அடங்கிய ஒரு முறைகாண் ஆயத்தால் உதவி செய்யப்படுதல்
வேண்டும், அவர்களில் குறைந்தது ஒருவர் பெண்ணாக இருத்தல் வேண்டும்,
மற்றும் அத்தகைய முறைகாண் ஆயம் மாநில அரசாங்கத்தால் அமர்த்தப்
படுதல் வேண்டும்.

**நலக் குழுமங்கள் மற்றும் இளைஞர் நீதிமன்றங்கள் தொடர்பான நெறிமுறை முதலியன.**

6. (1) ஒரு குழுமத்தின் உறுப்பினர்களுக்கிடையே அல்லது ஓர்
இளைஞர் நீதிமன்றத்தின் குற்றவியல் நடுவர்களுக்கிடையே ஏதேனும்
கருத்து வேறுபாடு இருக்குங்கால், பெரும்பான்மையினரின் கருத்து
மேலோங்கி நிற்கும், ஆனால், அத்தகைய பெரும்பான்மை எதுவும் இல்லா
திருக்கிறவிடத்து, தலைவரின் அல்லது நேர்வுக்கேற்ப, முதன்மைக் குற்றவியல்
நடுவரின் கருத்து மேலோங்கி நிற்கும்.

(2) ஒரு குழுமம் அல்லது இளைஞர் நீதிமன்றம், குழுமத்தின்
எவரேனும் உறுப்பினர் அல்லது, நேர்வுக்கேற்ப, இளைஞர் நீதிமன்றத்தின்
எவரேனும் குற்றவியல் நடுவர் இல்லாதிருந்தபோதிலும், செயலுறலாம்,
மற்றும் அந்தக் குழுமத்தால் அல்லது இளைஞர் நீதிமன்றத்தால் பிறப்பிக்
கப்பட்ட ஆணை எதுவும், நடவடிக்கையின் ஏதேனும் கட்டத்தின் போது,
எவரேனும் உறுப்பினர் அல்லது, நேர்வுக்கேற்ப, குற்றவியல் நடுவர் இல்
லாத காரணத்தால் மட்டுமே செல்லாநிலையது ஆவதில்லை.

(3) ஆள் எவரும், மாநில அரசாங்கத்தின் கருத்தில், அவர்
குழந்தை உளவியலிலும், குழந்தை நலத்திலும் சிறந்த தனியறிவு உடைய
வராக இருந்தாலன்றி, அந்தக் குழுமத்தின் ஓர் உறுப்பினராக அல்லது அந்த
இளைஞர் நீதிமன்றத்தின் ஒரு குற்றவியல் நடுவராக அமர்த்தப்படுதல்
ஆகாது.

**குழுமத்தின் மற்றும் இளைஞர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள்.**

7. (1) ஒரு குழுமம் அல்லது ஓர் இளைஞர் நீதிமன்றம், ஏதேனும்
பரப்பிடத்திற்காக அமைக்கப்பட்டிருக்கிறவிடத்து, அத்தகைய குழுமம்
அல்லது நீதிமன்றம், நிகழுறு காலத்தில் செல்லாற்றலுள்ள ஏதேனும்
பிற சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், ஆனால், இந்தச்
சட்டத்தில் பிறவாறாக வெளிப்படையாக வகைசெய்யப்பட்டவாறு
அல்லாமல், புறக்கணிக்கப்பட்ட இளையோர் அல்லது, நேர்வுக்கேற்ப, குற்ற
மிழைத்த இளையோர் தொடர்பாக இந்தச் சட்டத்தின்படியான நடவடிக்கை
கள் அனைத்தையும், தனிப்பட மேற்கொள்வதற்கு அதிகாரம் உடையது
ஆகும்:

வரம்புரையாக: ஒரு குழுமம் அல்லது ஓர் இளைஞர் நீதிமன்றம்,
வழக்கின் சூழ்நிலைகளைக் கவனத்திற்கொண்டு அவ்வாறு செய்வது தேவை
யாக இருக்கிறது என்று அது கருதுமாயின், எவையேனும் நடவடிக்கைகளை
ஏதேனும் இளைஞர் நீதிமன்றத்திற்கு அல்லது, நேர்வுக்கேற்ப, குழுமத்திற்கு
மாற்றம் செய்யலாம்;

மேலும் வரம்புரையாக: முதல் வரம்புரையின்படி எவையேனும்
நடவடிக்கைகளை மாற்றல் செய்தல் பற்றி ஒரு குழுமத்திற்கும், ஓர்

இளைஞர் நீதிமன்றத்திற்கும் இடையே, ஏதேனும் கருத்து வேறுபாடு இருக்கிறவிடத்து, அது முடிபுக்காக பெருநகர்த் தலைமைக் குற்றவியல் நடுவருக்கு அல்லது, நேர்வுக்கேற்ப, நீதித்துறைத் தலைமைக் குற்றவியல் நடுவருக்குக் குறித்தனுப்பப்படுதல் வேண்டும். மற்றும் மாவட்டக் குற்றவியல் நடுவர் ஒரு குழுமமாக அல்லது ஓர் இளைஞர் நீதிமன்றமாகப் பதவிப் பணியாற்றுகிற நேர்வில், அத்தகைய கருத்து வேறுபாடு, அமர்வு நீதிமன்றத்திற்குக் குறித்தனுப்பப்படுதல் வேண்டும், மற்றும் அத்தகைய குறித்தனுப்புகையின் பேரில், நேர்வுக்கேற்ப, பெருநகர்த் தலைமைக் குற்றவியல் நடுவரின் அல்லது நீதித் துறைத் தலைமைக் குற்றவியல் நடுவரின் அல்லது அமர்வு நீதிமன்றத்தின் முடிபு அறுதியானது ஆகும்.

(2) குழுமம் அல்லது இளைஞர் நீதிமன்றம் எதுவும், ஏதேனும் பரப்பிடத்திற்காக, அமைக்கப்படாதிருக்கிறவிடத்து, இந்தச் சட்டத்தாலோ அதன் வழியாலோ குழுமத்திற்கு அல்லது இளைஞர் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள், பின்வருபவர்களால் மட்டுமே, அந்தப் பரப்பிடத்தில் செலுத்தப்படுதல் வேண்டும், அவர்களாவர்.—

(அ) மாவட்டக் குற்றவியல் நடுவர்; அல்லது;

(ஆ) உட்கோட்டக் குற்றவியல் நடுவர்; அல்லது

(இ) எவரேனும் பெருநகர்க் குற்றவியல் நடுவர் அல்லது, நேர்வுக்கேற்ப, முதல் வகுப்பு குற்றவியல் நடுவர்.

(3) இந்தச் சட்டத்தாலோ அதன் வழியாலோ குழுமத்திற்கு அல்லது இளைஞர் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள், அந்த நடவடிக்கை அவற்றின் முன்பு மேல்முறையீட்டில், மேலாய்வில் அல்லது பிறவாறாக வருகிறபோது உயர் நீதிமன்றத்தாலும், அமர்வு நீதிமன்றத்தாலும்கூட செலுத்தப்படலாம்.

**இந்தச் சட்டத்தின் படி அதிகாரமளிக்கப் பெறாத ஒரு குற்றவியல் நடுவரால் பின்பற்றப் பட வேண்டிய நெறிமுறை.**

8. (1) இந்தச் சட்டத்தின்படி ஒரு குழுமத்தின் அல்லது ஓர் இளைஞர் நீதிமன்றத்தின் அதிகாரங்களைச் செலுத்துவதற்கு அதிகாரமளிக்கப் பெறாத எவரேனும் குற்றவியல் நடுவர், (சான்று அளிக்கும் நோக்கத்திற்காக அல்லாது பிறவாறாக) இந்தச் சட்டத்தின் வகையங்களில் எவற்றின் படியும் தம் முன்பு கொண்டுவரப்பட்ட அந்த ஓர் ஆள், ஓர் இளைஞர் என்று கருதுகிறபோது, அவர் அத்தகைய கருத்தைப் பதிவு செய்து அந்த இளைஞரையும், நடவடிக்கையின் பதிவையும், நடவடிக்கையின் மேல் அதிகாரவரம்பு உடைய தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பிற்கு மேலனுப்புதல் வேண்டும்.

(2) எந்தத் தகுதிறமுள்ள அதிகாரஅமைப்புக்கு உட்பிரிவு (1) இன்படி அந்த நடவடிக்கை மேலனுப்பப்படுகிறதோ அந்தத் தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு, அந்த இளைஞர் தன்முன்பு முதன் முதலில் கொண்டு வரப்பட்டிருந்தாற்போன்று, அந்த விசாரணையை நடத்துதல் வேண்டும்.

**இளைஞர் இல்லங்கள்.**

9. (1) மாநில அரசாங்கம், புறக்கணிக்கப்பட்ட இளைஞர்களை ஏற்றுக் கொள்வதற்காக எத்தனை தேவைப்படுமோ அத்தனை இளைஞர் இல்லங்களை இந்தச் சட்டததின்படி நிறுவிப் பேணிவரலாம்.

(2) மாநில அரசாங்கம், உட்பிரிவு (1) இன்படி நிறுவப்பட்ட அல்லது பேணி வரப்பட்ட ஓர் இல்லம் அல்லாத பிற ஏதேனும் நிறுவனம் இந்தச் சட்டத்தின்படி அதற்கு அனுப்பப்படும் புறக்கணிக்கப்பட்ட இளைஞரை ஏற்றுக்கொள்வதற்கு தகுந்ததாக இருக்கிறது என்று கருதுகிறவிடத்து, அது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஓர் இளைஞர் இல்லமாக அத்தகைய நிறுவனத்திற்கு உறுதிச் சான்றளிக்கலாம்.

(3) ஒரு புறக்கணிக்கப்பட்ட இளைஞர், இந்தச் சட்டத்தின் படி எந்த இளைஞர் இல்லத்திற்கு அனுப்பப்படுகிறாரோ, அந்த இளைஞர் இல்லம் ஒவ்வொன்றும், அந்த இளைஞருக்கு இடவசதி, பேணுகை மற்றும் கல்விக்கான, உறுதொழில் பயிற்சிக்கான மற்றும் மறுவாழ்வுக்கான வசதிகள் ஆகியவற்றை மட்டுமே அளிக்காமல், அவருடைய குணவியல்பு மற்றும் திறமைகளை மேம்படுத்திக்கொள்வதற்கான வசதிகளையும் அவருக்கு அளித்தலும், ஒழுக்கக்கேடு அல்லது சுரண்டலுக்கு எதிராகத் தமமைக் காத்துக்கொள்வதற்குத் தேவையான பயிற்சியை அவருக்குக் கொடுத்தலும் வேண்டும்; மற்றும் தம்முடைய ஆளுமையின் முழு வளர்ச்சியையும் மேம்பாட்டையும உறுதிசெய்வதற்கு வகுத்துரைக்கப்படும் பிற பணிகளைப் புரிதலும் வேண்டும்.

(4) மாநில அரசாங்கம், இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகள் வாயிலாக இளைஞர் இல்லங்களால் பேணிவரப்படும் பணிகளின் தரங்களையும் தன்மையையும் மற்றும் எந்தச் சூழ்நிலைகளின்படி மற்றும் எந்த முறையில் ஓர் இளைஞர் இல்லத்தின் உறுதிச்சான்றளிப்பு வழங்கப்படுமோ அல்லது திரும்பப்பெறப்படுமோ அந்தச் சூழ்நிலைகள் மற்றும் அந்த முறை உள்ளடங்கலான அவற்றின் மேலாண்மைக்கு வகைசெய்யலாம்.

சிறப்பு இல்லங்கள்.

10. (1) மாநில அரசாங்கம், குற்றமிழைத்த இளையோரை ஏற்றுக்கொள்வதற்கு எத்தனை தேவைப்படுமோ அத்தனை சிறப்பு இல்லங்களை இந்தச் சட்டத்தின்படி நிறுவிப் பேணி வரலாம்.

(2) மாநில அரசாங்கம் உட்பிரிவு (1) இன்படி நிறுவப்பட்ட அல்லது பேணிவரப்பட்ட ஓர் இல்லம் அல்லாத பிற ஏதேனும் நிறுவனம் இந்தச் சட்டத்தின்படி அதற்கு அனுப்பப்படும் குற்றமிழைத்த இளையோரை ஏற்றுக்கொள்வதற்குத் தகுந்ததாக இருக்கிறது என்று கருதுகிறவிடத்து, அது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒரு சிறப்பு இல்லமாக அத்தகைய நிறுவனத்திற்கு உறுதிச்சான்றளிக்கலாம்.

(3) இந்தச் சட்டத்தின்படி குற்றமிழைத்த இளைஞர் ஒருவர் எந்தச் சிறப்பு இல்லத்திற்கு அனுப்பப்படுகிறாரோ அந்தச சிறப்பு இல்லம் ஒவ்வொன்றும் அந்த இளைஞருக்கு இடவசதி, பேணுகை மற்றும் கல்விக்கான வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கான, மறுவாழ்வுக்கான வசதிகள் ஆகியவற்றை மட்டுமே அளிக்காமல், அவருடைய குணவியல்பு மற்றும் திறமைகளை மேம்படுத்திக்கொள்வதற்கான வசதிகளையும் அவருக்கு அளித்தலும் அவருடைய சீர்திருத்தத்திற்குத் தேவையான பயிற்சியை அவருக்குக் கொடுத்தலும் வேண்டும், மற்றும் தம்முடைய ஆளுமையின் முழு வளர்ச்சியையும் மேம்பாட்டையும் உறுதிசெய்வதற்கு வகுத்துரைக்கப்படும். பிற பதவிப்பணிகளை புரிதலும் வேண்டும்.

(4) மாநில அரசாங்கம், இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகள் வாயிலாக சிறப்பு இல்லங்களால் பேணி வரப்படும் பணிகளின் தரங்களையும் தன்மையையும் மற்றும் எந்தச் சூழ்நிலைகளின்படி மற்றும் எந்த முறையில் ஒரு சிறப்பு இல்லத்தின உறுதிச்சான்றளிப்பு வழங்கப்படுமோ அல்லது திரும்பப்பெறப்படுமோ அந்தச் சூழ்நிலைகள் மற்றும் அந்த முறை உள்ளடங்கலான அவற்றின் மேலாண்மைக்கு வகைசெய்யலாம்.

(5) உட்பிரிவு (4) இன்படி வகுக்கப்பட்ட விதிகள் இளையோரின் வயது மற்றும் அவர்களால் இழைக்கப்படும் குற்றச்செயல்களின் தன்மையின் அடிப்படையில் அவர்களைப் பாகுபடுத்துவதற்காகவும், பிரிப்பதற்காகவும்கூட வகைசெய்யலாம்.

கூர்நோக்கு இல்லங்கள்.

11. (1) மாநில அரசாங்கம் இந்தச் சட்டத்தின்படி இளையோர் பற்றிய ஏதேனும் விசாரணை முடிவுறாநிலையிலிருக்கிறபோது அவர்களைத் தற்காலிகமாக ஏற்றுக்கொள்வதற்கு எத்தனை தேவைப்படுமோ அத்தனை கூர்நோக்கு இல்லங்களை நிறுவிப் பேணிவரலாம்.

(2) மாநில அரசாங்கம், உட்பிரிவு (1) இன்படி நிறுவப்பட்ட அல்லது பேணிவரப்பட்ட ஓர் இல்லம் அல்லாத பிற ஏதேனும் நிறுவனம், இந்தச் சட்டத்தின்படி இளையோர் பற்றிய ஏதேனும் விசாரணை முடிவுறாநிலையிலிருக்கிறபோது, அவர்களைத் தற்காலிகமாக ஏற்றுக்கொள்வதற்குத் தகுந்ததாக இருக்கிறது என்று கருதுகிறவிடத்து, அது இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக ஒரு கூர்நோக்கு இல்லமாக அத்தகைய நிறுவனத்தை ஏற்பளிக்கலாம்.

(3) ஓர் இளைஞர் இந்தச் சட்டத்தின்படி எந்த கூர்நோக்கு இல்லத்திற்கு அனுப்பப்படுகிறாரோ அந்தக் கூர்நோக்கு இல்லம் ஒவ்வொன்றும், அந்த இளைஞருக்கு இடவசதி, பேணுகை, மருத்துவ ஆய்வுக்கான மற்றும் பண்டுவத்திற்கான வசதிகள் ஆகியவற்றை மட்டுமே அளிக்காமல், அவருக்குப் பயனுள்ள வாழ்க்கைத் தொழிலுக்கான வசதிகளுக்கும் கூட வகைசெய்யலாம்.

(4) மாநில அரசாங்கம், இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகள் வாயிலாக, கூர்நோக்கு இல்லங்களால் பேணி வரப்படும் பணிகளின் தரங்களையும், தன்மையையும் மற்றும் எந்தச் சூழ்நிலைகளின்படி மற்றும்

எந்த முறையில் ஒரு நிறுவனம் ஒரு கூர்நோக்கு இல்லமாக ஏற்பளிக்கப் படுமோ அல்லது ஏற்பளிப்பு திரும்பப் பெறப்படுமோ அந்தக் குறு[illegible] மற்றும் அந்த முறை உள்ளடங்கலாக கூர்நோக்கு இல்லங்களின் மேலாண் மைக்கு வகைசெய்யலாம்.

**பிற்காப்பு அமைப்புகள்.**

12. மாநில அரசாங்கம், இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகள் வாயிலாக:—

(அ) பிற்காப்பு அமைப்புகளின் நிறுவுகை அல்லது ஏற்பளிப்புக்காக மற்றும் இந்தச் சட்டத்தின்படி அவற்றினுடைய பதவிப் பணிகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்காக அவற்றால் செலுத்தப்படும் அதிகாரங்களுக்காக,

(ஆ) இளைஞர் இல்லங்களை அல்லது சிறப்பு இல்லங்களை விட்டு இளையோர் வெளியேறிய பின்பு, அவர்களைக் காப்பில் கொள்ளும் நோக்கத்திற்காகவும், ஒரு நேர்மையான, செயலூக்கமுள்ள மற்றும் பயனுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு அவர்களை இயல்விக்கும் நோக்கத்திற்காகவும், அத்தகைய பிற்காப்பு அமைப்புகளால் பின்பற்றப்பட வேண்டிய பிற்காப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு திட்ட முறைக்காக,

(இ) ஓர் இளைஞர் இல்லம் அல்லது நேர்வுக்கேற்ப, சிறப்பு இல்லத்திலிருந்து அவரை விடுவிப்பதற்கு முன்பு இளைஞர் ஒவ்வொருவரையும் பொறுத்த மட்டில், அத்தகைய இளைஞரின் பிற்காப்பின் தேவை மற்றும் தன்மை அத்தகைய பிற்காப்பின் காலஅளவு, அதன் மேற்பார்வை பற்றி, கண்காணிப்பு அலுவலரால் ஓர் அறிக்கை தயாரிக்கப்படுவதற்காக அல்லது பணிந்தனுப்பப்படுவதற்காக மற்றும் அத்தகைய இளைஞர் ஒவ்வொருவரின் முன்னேற்றத்தின் மேல் அந்தக் கண்காணிப்பு அலுவலரால், ஓர் அறிக்கை பணிந்தனுப்பப் படுவதற்காக.

(ஈ) அத்தகைய பிற்காப்பு அமைப்புகளால் பேணி வரப்படும் பணிகளின் தரங்கள் மற்றும் தன்மைக்காக,

(உ) இளையோரின் பிற்காப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் திட்டமுறையைத் திறம்பட நிறைவேற்றும் நோக்கத்திற்காகத் தேவைப் படும் பிற பொருட்பாடுகளுக்காக,

வகை செய்யலாம்.

## அத்தியாயம் III

### புறக்கணிக்கப்பட்ட இளையோர்

**குழுமங்களின் முன்பு புறக்கணிக்கப்பட்ட இளையோரை முன்னிலைப் படுத்துதல்.**

13. (1) ஓர் ஆள் வெளித்தோற்றத்திலேயே ஒரு புறக்கணிக்கப்பட்ட இளைஞராக இருக்கிறார் என்று, எவரேனும் காவல் அலுவலர் அல்லது பொது அல்லது சிறப்பு ஆணை வாயிலாக இதற்கென மாநில அரசாங்கத்தால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் பிற ஆள் கருதுவாராயின் அல்லது ஏதேனும் அமைப்பு கருதுமாயின், அத்தகைய காவல் அலுவலர் அல்லது பிற ஆள் அல்லது அமைப்பு ஒரு குழுமத்தின் முன்பு அவரைக் கொண்டு வருவதற்காக அந்த ஆளைப் பொறுப்பில் எடுத்துக்கொள்ளலாம்.

(2) ஒரு காவல் நிலையத்தின் பொறுப்பைக் கொண்ட அலுவலரிடம் அத்தகைய நிலையத்தின் வரம்புகளுக்குள் காணப்படும் எவரேனும் புறக்கணிக்கப்பட்ட இளைஞர் பற்றி, செய்தி கொடுக்கப்படுகிறபோது, அவர், அத்தகைய செய்தியின் பொருளை, அந்த நோக்கத்திற்காக வைத்துவரப்படும் ஒரு புத்தகத்தில் பதிதலும் அதன்மேல் அவர் தக்கதெனக் கருதும் நடவடிக்கையை எடுத்தலும் வேண்டும், மற்றும் அத்தகைய அலுவலர், அந்த இளைஞரைப் பொறுப்பில் எடுத்துக்கொள்ளக் கருதாம விருப்பாராயின் அவர், செய்யப்பட்ட அந்த பதிவின் ஒரு படியை குழுமத்திற்கு மேலனுப்புதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1) இன்படி பொறுப்பில் எடுத்துக்கொள்ளப்படும் இளைஞர் ஒவ்வொருவரும், ஏதேனும் காலஇழப்பு இல்லாமல், ஆனால், அந்த இளைஞர் பொறுப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்த அந்த இடத்திலிருந்து குழுமத்திற்குச் செல்லும் பயணத்திற்குத் தேவையான காலம் நீங்கலாக, அவ்வாறு பொறுப்பில் எடுத்துக்கொண்டதிலிருந்து இருபத்துநான்கு மணிநேரக் காலஅளவிற்குள், குழுமத்தின் முன்பு கொண்டு வரப்படுதல் வேண்டும்.

(4) உட்பிரிவு (1)இன்படி பொறுப்பில் எடுத்துக்கொள்ளப்படும் இளைஞர் ஒவ்வொருவரும், அவர், தம்முடைய பெற்றோர் அல்லது காப்பாளருடன் வைத்துவரப்பட்டாலன்றி, அவர் ஒரு குழுமத்தின் முன்பு கொண்டுவரப்படக்கூடிய வரையில், ஒரு கூர்நோக்கு இல்லத்திற்கு அனுப்பப்படுதல்வேண்டும், (ஆனால், ஒரு காவல் நிலையத்திற்கு அல்லது சிறைச்சாலைக்கு, அன்று).

**புறக்கணிக்கப்பட்ட இளைஞருக்குப் பெற்றோருள்ளபோது பின்பற்றப்பட வேண்டிய சிறப்புநெறிமுறை.**

14. (1) காவல் அலுவலரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள் அல்லது அமைப்பின் கருத்தில் ஒரு புறக்கணிக்கப்பட்ட இளைஞராகி இருக்கிற ஓர் ஆள் அந்த இளைஞரை உள்ளபடியான பொறுப்பில் அல்லது அவர்மீது கட்டுப்பாடு கொண்டுள்ள ஒரு பெற்றோர் அல்லது காப்பாளரைக் கொண்டிருப்பராயின், அந்தக் காவல் அலுவலர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள் அல்லது அமைப்பு, அந்த இளைஞரை பொறுப்பில் எடுத்துக் கொள்வதற்கு மாற்றாக அந்த இளைஞர் பற்றிய விசாரணையைத் தொடங்குவதற்காகக் குழுமத்திற்கு ஓர் அறிக்கையைச் செய்யலாம்.

(2) உட்பிரிவு (1)இன்படியான ஓர் அறிக்கையைப் பெற்றதன் பேரில், அந்தக் குழுமம், தனக்கு முன்பு அந்த இளைஞரை முன்னிலைப் படுத்துவதற்கு மற்றும் அந்த இளைஞர் இந்தச் சட்டத்தின் வகையங்களின்படி ஏன் ஒரு புறக்கணிக்கப்பட்ட இளைஞர் போன்று நடவடிக்கை மேற்கொள்ளப்படக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு பெற்றோர் அல்லது காப்பாளரைக் கோரலாம், மற்றும் அந்தக் குழுமத்தினுடைய அதிகாரவரம்பிலிருந்து அந்த இளைஞர் பெரும்பாலும் அகற்றப்பட அல்லது மறைத்து வைக்கப்படவிருக்கிறார் என்றுஅதற்குத் தோன்றுமாயின் அது, ஒரு கூர்நோக்கு இல்லம் அல்லது ஒரு பாதுகாப்பிடத்திலிருந்து (அந்த இளைஞரை உடனடியாக முன்னிலைப்படுத்துவதற்காக ஒரு சோதனை ஆணையைப் பிறப்பிப்பது தேவையாகுமாயின் அவரை அகற்றுவதற்கு உடனடியாக ஆணையிடலாம்.

**புறக்கணிக்கப்பட்ட இளையோர் பற்றி குழுமத்தால் செய்யப்படும் விசாரணை.**

15. (1) ஒரு புறக்கணிக்கப்பட்ட இளைஞராகச் சாட்டுரைக்கப்படும் ஓர் ஆள், ஒரு குழுமத்தின் முன்பு முன்னிலைப்படுத்தப்படுகிறபோது, அது அந்த இளைஞரைக் கொண்டுவந்த அல்லது அந்த அறிக்கையைச் செய்த காவல் அலுவலர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள் அல்லது அமைப்பை ஆராய்வு செய்தலும், அத்தகைய விசாரணையின் பொருளைப் பதிவு செய்தலும், வகுத்துரைக்கப்பட்ட முறையில் விசாரணையை நடத்துதலும் வேண்டும், மற்றும் அந்த இளைஞர் தொடர்பாக தான் தக்கதெனக் கருதும் ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

(2) ஒரு குழுமம், விசாரணையின்பேரில், ஓர் இளைஞர் ஒரு புறக்கணிக்கப்பட்ட இளைஞராக இருக்கிறார் என்றும், அவர்மீது அவ்வாறு, நடவடிக்கை மேற்கொள்வது உகந்ததாக இருக்கிறது என்றும், தெளிவுறக்காணுமிடத்து, அந்தக் குழுமம், அவர் ஓர் இளைஞராக இருப்பதினின்றும் அற்றுப்போகிறவரையிலான அந்தக் காலஅளவிற்கு, ஓர் இளைஞர் இல்லத்திற்கு அந்த இளைஞர் அனுப்பப்படுவதற்குப் பணிக்கிற ஓர் ஆணையைப் பிறப்பிக்கலாம்:

வரம்புரையாக : அந்தக் குழுமம், பதிவுசெய்யப்படவேண்டிய காரணங்களுக்காக, அவ்வாறு தங்கியிருக்கும் காலஅளவை நீட்டிக்கலாம், ஆனால் இளைஞர் ஒரு சிறுவன் ஆகும் நேர்வில், பதினெட்டு வயது, அல்லது ஒரு சிறுமி ஆகும் நேர்வில் இருபது வயது நிறைவெய்தும்போது, தங்கியிருக்கும் காலஅளவை அந்தக் காலத்திற்கு மேற்பட்டு எந்த நேர்விலும் நீடித்தல் ஆகாது :

மேலும் வரம்புரையாக : அந்தக் குழுமம், அது, வழக்கின் சூழ்நிலைகளைக் கவனத்திற்கொண்டு பதிவுசெய்யப்படவேண்டிய காரணங்களுக்காக, அவ்வாறு செய்வது உகந்ததாக இருக்கிறது என்று தெளிவுறக் காணுமாயின், அது தக்கதெனக் கருதுகிற காலஅளவிற்கு, தங்கியிருக்கும் காலஅளவைக் குறைக்கலாம்.

(3) ஓர் இளைஞர் பற்றிய ஏதேனும் விசாரணையின் முடிவுறாநிலையின்போது, அந்த இளைஞர் தம்முடைய பெற்றோர் அல்லது காப்பாளருடன் வைத்துவரப்பட்டாலன்றி, குழுமத்தின் ஆணையில் குறித்துரைக்கப்படும் காலஅளவிற்கு, ஒரு கூர்நோக்கு இல்லத்திற்கு அல்லது ஒரு பாதுகாப்பிடத்திற்கு அவர் அனுப்பப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக: இளைஞர் எவரும், குழுமத்தின் கருத்தில், அத்தகைய பெற்றோர் அல்லது காப்பாளர் அந்த இளைஞர் மீது முறையான கவனத்தையும் கட்டுப்பாட்டையும் செலுத்துவதற்கு தகுந்தவராக இல்லாதிருப்பாராயின் அல்லது இயலாதவராக இருப்பாராயின் அல்லது செலுத்தாதிருப்பாராயின், அவருடைய பெற்றோர் அல்லது காப்பாளருடன் வைத்து வரப்படுதல் ஆகாது.

புறக்கணிக்கப்பட்ட இளைஞரைப் பொருத்தமான பாதுகாவலுக்கு அனுப்புவதற்கு அதிகாரம்.

16. (1) அந்தக் குழுமம் அவ்வாறு தக்கதெனக் கருதுமாயின், அது ஓர் இளைஞர் இல்லத்திற்கு அந்த இளைஞரை அனுப்புவதற்கு பிரிவு 15 இன் உட்பிரிவு(3) இன்படி, ஓர் ஆணையைப் பிறப்பிப்பதற்கு மாறாக இளைஞரின் நன்னடத்தைக்கும், நல்வாழ்விற்கும், சுமத்துவதற்குக் குழுமம் தக்கதெனக் கருதும் வரைக்கட்டுகளைக் கடைபிடிப்பதற்கும் பொறுப்புடையவராக இருக்கும் பிணையாளுடனோ இல்லாமலோ ஒரு பெற்றோர், காப்பாளர் அல்லது தகுந்த ஆள் ஒரு முறியை எழுதிக்கொடுப்பதன்பேரில், அந்த இளைஞரை அத்தகைய பெற்றோர், காப்பாளர் அல்லது தகுந்த ஆளின் கவனிப்பின்கீழ் வைக்கிற ஓர் ஆணையைப் பிறப்பிக்கலாம்.

(2) உட்பிரிவு (1)இன்படி ஓர் ஆணையைப் பிறப்பிக்கும் நேரத்தில் அல்லது பிந்திய எந்த நேரத்திலும், அந்தக் குழுமம் முதற்படியாக மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத ஏதேனும் காலஅளவிற்கு அந்த இளைஞர் மேற்பார்வையின்கீழ் வைக்கப்படவேண்டுமென்று ஓர் ஆணையைப் பிறப்பிக்கலாம்.

(3) உட்பிரிவு (1) இல் அல்லது உட்பிரிவு (2) இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், எந்த நேரத்திலும், கண்காணிப்பு அலுவலரிடமிருந்து ஓர் அறிக்கையைப் பெற்றதன்பேரில் அல்லது பிறவாறாக, அந்த இளைஞரைப் பொறுத்தும். அதனால் சுமத்தப்பட்ட வரைக்கட்டுகளில் எவையும் மீறப்பட்டிருந்திருக்கிறது என்று குழுமத்திற்குத் தோன்றுமாயின் அது, தக்கதெனக் கருதுகிற விசாரணையைச் செய்தபின்பு, அந்த இளைஞர் ஓர் இளைஞர் இல்லத்திற்கு அனுப்பப்படுவதற்கு ஆணையிடலாம்.

கட்டுக்கடங்காத இளையோர்

17. ஓர் இளைஞரின் ஒரு பெற்றோர் அல்லது காப்பாளர், அந்த இளைஞர் முறையான கவனத்தையும் கட்டுப்பாட்டையும் செலுத்துவதற்குத் தாம் இயலாதவராக இருக்கிறார் என்று முறையிடுகிறவிடத்து மற்றும் விசாரணையின்பேரில், அந்தக் குழுமம், அந்த இளைஞர் பற்றி இந்தச் சட்டத்தின்படி நடவடிக்கைகள் தொடங்கப்படவேண்டியனவாயிருக்கின்றன என்று தெளிவுறக்காணுமிடத்து, அது, அந்த இளைஞரை ஒரு கூர்நோக்கு இல்லத்திற்கு அல்லது ஒரு பாதுகாப்பிடத்திற்கு அனுப்பலாம், மற்றும் அது தக்கதெனக் கருதும் மேலுமான விசாரணையைச் செய்யலாம் மற்றும் பிரிவு 15 இன் மற்றும் பிரிவு 16 இன் வகையங்கள், எந்த அளவுக்குக் கூடுமோ அந்த அளவுக்கு, நடவடிக்கைகளுக்குப் பொருந்துதல் வேண்டும்.

## அத்தியாயம் IV

## குற்றமிழைத்த இளையோர்

இளையோரின் பிணை மற்றும் பாதுகாவல்.

18. (1) பிணையத்தில் விடுவதற்குரிய அல்லது பிணையத்தில் விடுதற்குரியதல்லாத ஒரு குற்றச்செயலுக்காகக் குற்றஞ்சார்த்தப்பட்டு, ஓர் இளைஞராக வெளிப்படையாகத் தெரிகிற எவரேனும் ஆள், கைது செய்யப்படுகிற அல்லது காவலில் வைக்கப்படுகிற அல்லது ஓர் இளைஞர் நீதிமன்றத்தின் முன்பு முன்னிலையாகிற அல்லது கொண்டுவரப்படுகிறபோது, அத்தகைய ஆள், குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இல்
2/1974
அல்லது நிகழுறுகாலத்தில் செல்லாற்றலிலுள்ள ஏதேனும் பிற சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், பிணையாளுடனோ அல்லது இல்லாமலோ பிணையத்தின்பேரில் விடுவிக்கப்படுதல் வேண்டும், ஆனால், பெரும்பாலும், அந்த விடுவிப்பு, அறியப்பட்ட குற்றவாளியுடன் இணைந்திருப்பதற்கு அவரைக் கொண்டு வருகிறது அல்லது அவரை ஒழுக்கக் கேட்டிற்கு உள்ளாக்குகிறது என்று அல்லது அவருடைய விடுவிப்பு, நீதியின் குறிக்கோளைச் சிதைக்கக்கூடும் என்று நம்புவதற்குத் தகுமான காரணங்கள் தோன்றுமாயின் அவ்வாறு விடுவிக்கப்படுதல் ஆகாது.

(2) கைது செய்யப்பட்டிருந்திருக்கிற அத்தகைய ஆள், காவல் நிலையத்தின் பொறுப்பைக்கொண்ட அலுவலரால் உட்பிரிவு (1)இன்படி பிணையத்தின்பேரில் விடுவிக்கப்படாதிருக்கிறபோது, அத்தகைய அலுவலர், ஓர் இளைஞர் நீதிமன்றத்தின்முன்பு அவர் கொண்டுவரப்படக்கூடிய வரையில், வகுத்துரைக்கப்பட்ட முறையில், ஒரு கூர்நோக்கு இல்லத்தில் அல்லது ஒரு பாதுகாப்பிடத்தில் அவர் வைத்துவரப்படும்படிச் செய்வித்தல் வேண்டும். (ஆனால் ஒரு காவல் நிலையம் அல்லது சிறைச்சாலையில் அன்று.)

(3) அத்தகைய ஆள், இளைஞர் நீதிமன்றத்தால் உட்பிரிவு (1)இன் படி பிணையத்தின்பேரில் விடுவிக்கப்படாதபோது, அது, அவரைச் சிறைக்கு அனுப்புவதற்கு மாற்றாக, அவர் பற்றிய விசாரணை முடிவுறா நிலையிலிருக்கிறபோது, ஆணையில் குறித்துரைக்கப்படும் காலஅளவிற்கு ஒரு கூர்நோக்கு இல்லத்திற்கு அல்லது ஒரு பாதுகாப்பிடத்திற்கு அவரை அனுப்புகிற ஓர் ஆணையைப் பிறப்பித்தல் வேண்டும்.

பெற்றோர் அல்லது காப்பாளர் அல்லது கண்காணிப்பு அலுவலருக்குச் செய்தி அளித்தல்.

19. ஓர் இளைஞர் கைது செய்யப்படுகிறவிடத்து, எந்தக் காவல் நிலையத்திற்கு அந்த இளைஞர் கொண்டுவரப்படுகிறாரோ அந்தக் காவல் நிலையத்தின் பொறுப்பைக்கொண்ட அலுவலர், அந்தக் கைதிற்குப் பின்பு கூடியவிரைவில்,—

(அ) இளைஞரின் பெற்றோர் அல்லது காப்பாளர் அவரைக் கண்டுபிடிக்கமுடியுமாயின் அத்தகைய கைது பற்றி அவருக்குச் செய்தி அளித்தல் மற்றும் எந்த இளைஞர் நீதிமன்றத்தின் முன்பு இளைஞர் முன்னிலையாக வேண்டுமோ அந்த இளைஞர் நீதிமன்றத்திற்கு அவர் வந்திருத்தல்வேண்டுமென்று பணித்தல் வேண்டும்; மற்றும்

(ஆ) விசாரணை செய்வதற்கு இளைஞர் நீதிமன்றத்திற்குப் பெரும்பாலும் உதவியாக இருக்கும் இளைஞரின் முன்னடத்தை, குடும்ப வரலாறு பிற பொருட்பாள் சூழ்நிலைகள் ஆகியவை பற்றிய செய்தியைப் பெறுவதற்கு கண்காணிப்பு அலுவலரை இயல்விக்கும் பொருட்டு அத்தகைய கைது பற்றி அவருக்குச் செய்தி அளித்தல் வேண்டும்.

குற்றமிழைத்த இளையோர் பற்றி இளைஞர் நீதிமன்றத்தால் செய்யப்படும் விசாரணை.

20. ஒரு குற்றச்செயலுக்காகக் குற்றஞ்சார்த்தப்பட்டிருந்திருக்கிற ஓர் இளைஞர், ஓர் இளைஞர் நீதிமன்றத்தின் முன்பு முன்னிலையாகிற அல்லது முன்னிலைப்படுத்தப்படுகிற, அந்த இளைஞர் நீதிமன்றம், பிரிவு 39 இன் வகையங்களுக்கு இணங்க, விசாரணையைச் செய்தல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, அந்த இளைஞர் தொடர்பாக அது தக்கதெனக் கருதும் ஆணையைப் பிறப்பிக்கலாம்.

குற்றமிழைத்த இளையோர் பற்றிப் பிறப்பிக்கப்படும் ஆணைகள்.

21. (1) ஓர் இளைஞர் நீதிமன்றம், ஓர் இளைஞர் குற்றச்செயலை இழைத்துள்ளார் என்று, விசாரணையின் பேரில் தெளிவுறக்காணுமிடத்து, அப்போது, நிகழுறுகாலத்தில் செல்லாற்றலிலுள்ள ஏதேனும் பிற சட்டத்தில் அடங்கியுள்ளதற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், அந்த இளைஞர் நீதிமன்றம், அவ்வாறு தக்கதெனக் கருதுமாயின்,—

(அ) அறிவுரை அல்லது கண்டிப்பு வழங்கிய பின்பு, அந்த இளைஞர் வீட்டிற்குச் செல்ல அனுமதிக்கலாம்;

(ஆ) அந்த இளைஞரின் நன்னடத்தை மற்றும் நல்வாழ்விற்காக, அந்த நீதிமன்றம் வேண்டுறுத்தும் பிணையாளுடனோ அல்லது இல்லாமலோ பெற்றோர், காப்பாளர் அல்லது பிற தகுந்த ஆள் ஒரு முறியை எழுதிக்கொடுப்பதன்பேரில், அந்த இளைஞர் நன்னடத்தைக் கண்காணிப்பின்பேரில் விடுவிக்கப்படுவதற்கும், மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத ஏதேனும் காலஅளவிற்கு அத்தகைய எவரேனும் பெற்றோர், காப்பாளர் அல்லது பிற தகுந்த ஆளின் கவனிப்பின்கீழ் வைக்கப்படுவதற்கும் பணிக்கலாம்;

(இ) அந்த இளைஞரின் நன்னடத்தை மற்றும் நல்வாழ்விற்காக நன்னடத்தைக் கண்காணிப்பின்பேரில் அந்த இளைஞர் விடுவிக்கப்படுவதற்கும், மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத ஏதேனும் கால அளவிற்கும் ஏதேனும் தகுந்த நிறுவனத்தின் கவனிப்பின்கீழ் வைக்கப்படுவதற்கும் பணிக்கலாம்;

(ஈ) அந்த இளைஞர்—

(i) பதினான்கு வயதிற்கு மேற்பட்ட ஒரு சிறுவன் அல்லது பதினாறு வயதிற்கு மேற்பட்ட ஒரு சிறுமி ஆகும் நேர்வில், மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத ஒரு காலஅளவிற்கு,

(ii) எவரேனும் பிற இளைஞர் ஆகும் நேர்வில், அவர் ஓர் இளைஞராக இருப்பதினின்று அற்றுப்போகிற வரையிலான காலஅளவிற்கு,

ஒரு சிறப்பு இல்லத்திற்கு அனுப்பப்படுவதற்குப் பணிக்கும் ஓர் ஆணையைப் பிறப்பிக்கலாம்;

வரம்புரையாக: அந்த இளைஞர் நீதிமன்றம், குற்றச்செயலின் தன்மை மற்றும் வழக்கின் சூழ்நிலைகளைக் கவனத்திற் கொண்டு, பதிவுசெய்யப்படவேண்டிய காரணங்களுக்காக, அவ்வாறு செய்வது உகந்ததாக இருக்கிறது என்று, அது தெளிவுறக்காணுமாயின் அது தக்கதெனக் கருதுகிற கால அளவிற்கு, தங்கியிருக்கும் கால அளவைக் குறைக்கலாம்;

மேலும் வரம்புரையாக: அந்த இளைஞர் நீதிமன்றம், பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காக, அவ்வாறு தங்கியிருக்கும் காலஅளவை நீட்டிக்கலாம், ஆனால், அந்த இளைஞர், ஒரு சிறுவன் ஆகும் நேர்வில் பதினெட்டு வயது அல்லது ஒரு சிறுமி ஆகும் நேர்வில், இருபது வயது நிறைவெய்தும்போது தங்கியிருக்கும் காலஅளவை அந்தக் காலத்திற்கு மேற்பட்டு எந்த நேர்விலும் நீட்டித்தல் ஆகாது;

(உ) அந்த இளைஞர் பதினான்கு வயதிற்கு மேற்பட்டவராக இருந்து, பணம் சம்பாதிப்பாராயின், ஒரு பணத்தண்டம் செலுத்துமாறு அவருக்கு ஆணையிடலாம்.

(2) உட்பிரிவு (1)இன் கூறு (ஆ) இன் கூறு (இ)இன் கூறு (உ)இன்படி ஓர் ஆணை பிறப்பிக்கப்படுகிறவிடத்து, அந்த இளைஞர் நீதிமன்றம், இளைஞரின் மற்றும் பொது மக்களின் நலங்கருதி, அவ்வாறு செய்வது உகந்ததாக இருக்கிறது என்று கருதுமாயின், அதோடுகூட, ஆணையில் குறித்துரைக்கப்படும் மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத கால அளவின் போது, அதில் பெயர்குறிக்கப்பட்ட ஒரு கண்காணிப்பு அலுவலரின் மேற்பார்வையின்கீழ் அந்தக் குற்றமிழைத்த இளைஞர் தொடர்ந்திருத்தல் வேண்டும் என்று ஓர் ஆணையைப் பிறப்பிக்கலாம், மற்றும் அத்தகைய மேற்பார்வை ஆணையில் குற்றமிழைத்த இளைஞரின் உரிய மேற்பார்வைக்காக அது தேவையெனக் கருதுகிற வரைக்கட்டுகளைச் சுமத்தலாம்;

வரம்புரையாக: எந்த நேரத்திலும், பிற்பாடு கண்காணிப்பு அலுவலரிடமிருந்து ஓர் அறிக்கையைப் பெற்றதன்பேரில் அல்லது பிறவாறாக அந்தக் குற்றமிழைத்த இளைஞர் மேற்பார்வைக் கால அளவின்போது நன்னடத்தையுள்ளவராக இருந்திருக்கவில்லை என்று அல்லது எந்த தகுந்த நிறுவனத்தின் காப்பின்கீழ் அந்த இளைஞர் வைக்கப்பட்டாரோ, அந்த தகுந்த நிறுவனம், அந்த இளைஞரின் நன்னடத்தையையும் நல்வாழ்வையும் உறுதிசெய்வதற்கு இனிமேற்கொண்டும் இயலக்கூடியதாக அல்லது விருப்பமுடையதாக இல்லை என்று அந்த இளைஞர் நீதிமன்றத்திற்குத் தோன்றுமாயின், அது,தான் தக்கதெனக் கருதுகிற விசாரணையைச் செய்த பின்பு, அந்தக் குற்றமிழைத்த இளைஞர் ஒரு சிறப்பு இல்லத்திற்கு அனுப்பப்படுவதற்கு ஆணையிடலாம்.

(3) உட்பிரிவு (2)இன்படி ஒரு மேற்பார்வை ஆணையைப் பிறப்பிக்கிற இளைஞர் நீதிமன்றம், அந்த இளைஞருக்கு மற்றும் எந்தப் பெற்றோர், காப்பாளர் அல்லது பிற தகுந்த ஆள் அல்லது தகுந்த நிறுவனத்தின் காப்பின்கீழ் அந்த இளைஞர் வைக்கப்பட்டிருந்தாரோ, நேர்வுக்கேற்ப, அந்தப் பெற்றோர், காப்பாளர் அல்லது பிற தகுந்த ஆள் அல்லது தகுந்த நிறுவனத்திற்கு, ஆணையின் வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளை விவரித்தல் வேண்டும், மற்றும் உடனடியாக மேற்பார்வை ஆணையின் படி ஒன்று, நேர்வுக்கேற்ப, இளைஞர், பெற்றோர், காப்பாளர் அல்லது பிற தகுந்த ஆள் அல்லது தகுந்த நிறுவனத்திற்கு, பிணையர்கள், எவரேனுமிருப்பின், அவர்களுக்கு மற்றும் கண்காணிப்பு அலுவலருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படி எந்தச் சிறப்பு இல்லம் அல்லது எவரேனும் ஆள் அல்லது நிறுவனத்தின் பாதுகாவலுக்கு, ஓர் இளைஞர் அனுப்பப்பட அல்லது காப்படைவு செய்யப்பட வேண்டுமோ அந்தச் சிறப்பு இல்லம் அல்லது எவரேனும் ஆள் அல்லது நிறுவனத்தைத் தீர்மானிக்கையில், அந்த நீதிமன்றம், இளைஞர் சமய நம்பிக்கைக்கு முரணான சமய அறிவுறுத்தல் அவருக்குத் தெரிவிக்கப்படாதிருக்கிறது என்று உறுதி செய்வதற்கு இளைஞரின் சமயப்பிரிவிற்கு உரிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

**இளையோருக்கு எதிராகப் பிறப்பிக்கப்படாதிருக்கும் ஆணைகள்.**

22. (1) நிகழுறுகாலத்தில் செல்லாற்றலிலுள்ள ஏதேனும் பிற சட்டத்தில் அடங்கியுள்ளதற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும் குற்றமிழைத்த இளைஞர் எவரும், பணத்தண்டம் செலுத்தத் தவறுகையில், அல்லது பிணையம் கொடுக்கத் தவறுகையில் மரணதண்டனை அல்லது சிறைத்தண்டனை விதிக்கப்படுதல் அல்லது சிறைக்கு அனுப்பப்படுதல் ஆகாது;

வரம்புரையாக: பதினான்கு வயது நிறைவெய்தியுள்ள ஓர் இளைஞர் ஒரு குற்றச்செயலை இழைத்திருந்து, இழைக்கப்பட்ட குற்றச்செயல் மிகவும் கடுமையான தன்மையானது என்று, அல்லது அவரை அத்தகைய சிறப்பு இல்லத்திற்கு அனுப்புவது அவரது நலனுக்கு அல்லது ஒரு சிறப்பு இல்லத்திலுள்ள பிற இளைஞரின் நலனுக்கு உரியதாக இல்லாதிருக்கிற வகையில், அவரது நடத்தையும், ஒழுக்கமும் இருந்திருக்கிறது என்றும், இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்ட பிற நடவடிக்கைகளில் எதுவும் பொருத்தமானதாக அல்லது போதுமானதாக இல்லை என்றும் அந்த இளைஞர் நீதிமன்றம் தெளிவுறக்காணுமிடத்து, அந்த இளைஞர் நீதிமன்றம் அது, தக்கதெனக் கருதுகிற இடத்திலும், முறையிலும் அந்தக் குற்ற மிழைத்த இளைஞர் பத்திரமான பாதுகாப்பில் வைக்கப்படுவதற்கு ஆணை யிடலாம், மற்றும் மாநில அரசாங்கத்தின் ஆணைகளுக்காக வழக்கை அறிக்கை செய்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இன்படி ஓர் இளைஞர் நீதிமன்றத்திலிருந்து ஓர் அறிக்கையைப் பெற்றதன்பேரில், மாநில அரசாங்கம் அந்த இளைஞரைப் பொறுத்து, அது முறையானதெனக் கருதுகிற ஏற்பாட்டைச் செய்யலாம், மற்றும் அது தக்கதெனக் கருதுகிற இடத்திலும், வரைக்கட்டுகளின் பேரிலும், அத்தகைய குற்றமிழைத்த இளைஞர் காவலில் வைக்கப்படுவதற்கு ஆணையிடலாம்:

வரம்புரையாக: அவ்வாறு ஆணையிடப்பட்ட காவல் வைப்புக் காலஅளவு, இழைக்கப்பட்ட குற்றச்செயலுக்காக இளைஞர், எந்தக் காலஅளவுக்குச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருக்கக் கூடுமோ, சிறைத் தண்டனையின் அந்த மேல்வரைக்கால அளவிற்கு மேற்படுதல் ஆகாது.

**இளைஞருக்கு எதிரான, குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டத்தின் அத்தியாயம் VIII இன்படி யான நட வடிக்கை தகுதிறமுள்ளது அன்று.**

23. குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இல் அடங்கியுள்ளதற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், மேற்சொன்ன தொகுப்புச் சட்டத்தின் அத்தியாயம் VIII இன்படி ஓர் இளைஞருக்கு எதிராக நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது, மற்றும் ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் ஆகாது. 2/1974

**இளைஞரையும் ஓர் இளைஞராக இராத ஆளையும் சேர்த்து கூட்டு வழக்கு விசாரணை எதுவும் செய்தல் ஆகாது.**

24. (1) குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இன் பிரிவு 223இல் அல்லது நிகழுறுகாலத்தில் செல்லாற்றலிலுள்ள ஏதேனும் பிற சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் இளைஞர் எவரும், ஓர் இளைஞராக இராத ஓர் ஆளுடன் சேர்ந்து ஏதேனும் குற்றச்செயலுக் காக குற்றஞ்சார்த்தப்படுதல் அல்லது அதற்காக வழக்கு விசாரணை செய்யப்படுதல் ஆகாது. 2/1974

(2) ஓர் இளைஞரும் ஓர் இளைஞராக இராத எவரேனும் ஆளும், உட்பிரிவு (1)இல் அடங்கியுள்ள தடை எதுவும் இல்லாதிருப்பின் எந்தக் குற்றச்செயல் இழைத்ததாகக் குற்றஞ்சார்த்தப்பட்டு ஒன்றாக விசாரணை செய்யப்பட்டிருந்திருக்கக்கூடுமோ, அந்த ஒரு குற்றச்செயல் இழைத்த தாக, குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இன் பிரிவு 223இன் அல்லது நிகழுறுகாலத்தில் செல்லாற்றலிலுள்ள ஏதேனும் பிற சட்டத்தின்படி, அந்த இளைஞர் குற்றஞ்சார்த்தப்படுவாராயின், அந்தக் குற்றச்செயலை விசாரணைக்கு எடுத்துக்கொள்கிற நீதிமன்றம், அந்த இளைஞரின் மற்றும் பிற ஆளின் தனித்தனியான வழக்கு விசாரணைகளுக்குப் பணித்தல் வேண்டும். 2/1974

**குற்றத் தீர்ப்பைச் சேர்ந்திருக்கும் தகுதிக் கேட்டை அகற்றுதல்.**

25. ஏதேனும் பிற சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பி னும், குற்றச்செயல் ஒன்று இழைத்திருந்து, இந்தச் சட்டத்தின் வகையங் களின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்திருக்கிற ஓர் இளைஞர் அத்தகைய சட்டத்தின்படி குற்றச்செயலுக்கான ஒரு குற்றத்தீர்ப்பைச் சேர்ந்திருக்கும் தகுதிக்கேடு, ஏதேனுமிருப்பின், அதற்கு உட்படுதல் ஆகாது.

முடிவுறாநிலையிலுள்ள வழக்குகளைப் பொறுத்து சிறப்பு வகையம்.

26. இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், எந்த தேதியன்று இந்தச் சட்டம் ஏதேனும் பரப்பிடத்தில் செல்லாற்றல் பெறுகிறதோ அந்தத் தேதியன்று அந்தப் பரப்பிடத்தில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தில் ஓர் இளைஞரைப் பொறுத்து முடிவுறாநிலையிலுள்ள நடவடிக்கைகள் அனைத்தும் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாதிருந்திருந்ததைப் போன்றே, அந்த நீதிமன்றத்தில் தொடர்ந்து நடத்தப்படுதல் வேண்டும். மற்றும் அந்த இளைஞர் குற்றச்செயல் இழைத்துள்ளார் என்று அந்த நீதிமன்றம் முடிவுக்கு வருமாயின், அது, அத்தகைய முடிவைப் பதிவு செய்து, அந்த இளைஞரைப் பொறுத்து ஏதேனும் குற்றத் தீர்ப்பினைப் பிறப்பிப்பதற்கு மாற்றாக, இளைஞர் நீதிமன்றத்திற்கு அந்த இளைஞரை மேலனுப்புதல் வேண்டும், அந்த இளைஞர் அந்தக் குற்றச்செயல் இழைத்துள்ளார் என்று இந்தச் சட்டத்தின்படியான விசாரணையின் பேரில் அது தெளிவுறக்காணப்பட்டிருந்தாற்போன்று, இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு இணங்கியவாறு அந்த இளைஞரைப் பொறுத்து ஆணைகள் பிறப்பித்தல் வேண்டும்.

## அத்தியாயம் V

### பொதுவாக, தகுதிறமுள்ள அதிகாரஅமைப்புகளின் நெறிமுறை மற்றும் அத்தகைய அதிகார அமைப்புகளின் ஆணைகள்மீது மேல்முறையீடுகள் மற்றும் மேலாய்வுகள்

குழுமங்கள் மற்றும் இளைஞர் நீதிமன்றங்களின் அமர்வுகள் முதலியன.

27. (1) ஒரு குழுமம் அல்லது ஓர் இளைஞர் நீதிமன்றம், வகுத்துரைக்கப்படும் இடத்திலும், நாளன்றும், முறையிலும் அதனுடைய அமர்வுகளை நடத்துதல் வேண்டும்.

(2) பிரிவு 7இன் உட்பிரிவு (2)இன்படி ஒரு குழுமத்தின் அல்லது, நேர்வுக்கேற்ப, ஓர் இளைஞர் நீதிமன்றத்தின் அதிகாரங்களைச் செலுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பெற்ற ஒரு குற்றவியல் நடுவர், இந்தச் சட்டத்தின்படி ஓர் இளைஞரைப் பற்றி ஏதேனும் விசாரணை செய்யுங்கால், நடைமுறையில் இயன்ற அளவு எதில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களின் வழக்கமான அமர்வுகள் நடத்தப்படுகின்றனவோ அதிலிருந்து வேறுபட்ட கட்டிடம் அல்லது அறை ஒன்றில், அல்லது எந்த நாட்களன்று அல்லது எந்த நேரங்களில் அத்தகைய நீதிமன்றங்களின் வழக்கமான அமர்வுகள் நடத்தப்படுகின்றனவோ அதிலிருந்து வேறுபட்ட அந்த நாட்களன்று அல்லது அந்த நேரங்களில் அமருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி ஓர் இளைஞரைப் பற்றிய ஒரு விசாரணை விரைவாக நடத்தப்படுதல் வேண்டும், மற்றும் எழுத்து வடிவில் பதிவு செய்யப்படவேண்டிய சிறப்புக் காரணங்களுக்காக, அதிகார அமைப்பு பிறவாறாகப் பணித்தாலன்றி, அதனுடைய தொடக்கத் தேதியிலிருந்து மூன்று திங்கள் கால அளவுக்குள் வழக்கமாக முடிக்கப்படுதல் வேண்டும்.

தகுதிறமுள்ள அதிகார அமைப்பின் முன்பு முன்னிலையாகும் ஆட்கள்.

28. (1) இந்தச் சட்டத்தில் வகைசெய்யப்பட்டவாறல்லாமல், தகுதிறமுள்ள ஓர் அதிகார அமைப்பின் ஏதேனும் அமர்வில்,—

(அ) தகுதிறமுள்ள அந்த அதிகார அமைப்பின் எவரேனும் அலுவலர், அல்லது

(ஆ) தகுதிறமுள்ள அந்த அதிகாரஅமைப்பின் முன்புள்ள விசாரணையின் தரப்பினர்கள், அந்த இளைஞரின் பெற்றோர் அல்லது காப்பாளர் மற்றும் காவல் அலுவலர்களும் சட்டத் தொழிலாற்றுநர்களும் உள்ளடங்கலாக அந்த விசாரணையில் நேரடியாகத் தொடர்புடைய பிற ஆட்கள், மற்றும்

(இ) முன்னிலையாவதற்கு தகுதிறமுள்ள அந்த அதிகார அமைப்பு அனுமதிக்கும் பிற ஆட்கள் தவிர, ஆள் எவரும், முன்னிலையாதல் ஆகாது.

(2) உட்பிரிவு (1)இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், ஒரு விசாரணையின்போது எந்தக் கட்டத்திலும், அந்த இளைஞரின் நலங்கருதி அல்லது பண்புநலம் அல்லது ஒழுக்கநெறியின் காரணமாக, காவல் அலுவலர்கள், சட்டத்தொழிலாற்றுநர்கள், பெற்றோர், காப்பாளர் அல்லது அந்த இளைஞர் உள்ளடங்கலாக எவரேனும் ஆள் தாமாகவே விலகிக் கொள்ளவேண்டியது உகந்ததாக இருக்கும் என்று தகுதிறமுள்ள ஓர் அதிகாரஅமைப்பு கருதுமாயின், தகுதிறமுள்ள, அந்த அதிகாரஅமைப்பு அத்தகைய பணிப்புரை வழங்கலாம், மற்றும் அத்தகைய பணிப்புரைக்கு இணங்கி நடக்க, எவரேனும் ஆள் மறுப்பாராயின், தகுதிறமுள்ள அந்த அதிகாரஅமைப்பு அவரை அகற்றிவிடலாம், மற்றும் இந்த நோக்கத்திற்காக, தேவைப்படுமாயின் வன்தாக்கு பயன்படுத்தப்படுமாறு செய்விக்கலாம்.

(3) சட்டத் தொழிலாற்றுநர் எவரும், ஒரு குழுமத்தின் முன்புள்ள நடவடிக்கையின், ஏதேனும் நேர்வில், அந்த குழுமத்தின் சிறப்பு அனுமதியுடன் தவிர, அதன் முன்பு முன்னிலையாவதற்கு உரிமை கொண்டவர் ஆகார்.

**இளைஞரின் பெற்றோர் அல்லது காப்பாளரின் வருகை.**

29. தகுதிறமுள்ள எந்த அதிகாரஅமைப்பின் முன்பு ஓர் இளைஞர் இந்தச் சட்டத்தின் வகையங்களில் எவற்றின்படியும் கொண்டுவரப்படுகிறாரோ, தகுதிறமுள்ள அந்த ஏதேனும் அதிகாரஅமைப்பு, அந்த இளைஞரை உள்ளபடியே பொறுப்பில் அல்லது கட்டுப்பாட்டில் கொண்டிருக்கும் எவரேனும் பெற்றோரை அல்லது காப்பாளரை, அது அவ்வாறு தக்கதெனக் கருதுகிறபோதெல்லாம், அந்த இளைஞரைப் பொறுத்து ஏதேனும் நடவடிக்கையில் முன்னிலையாகுமாறு வேண்டுறுத்தலாம்.

**இளைஞரின் வருகையை வேண்டாமென விட்டுவிடுதல்.**

30. ஒரு விசாரணையின்போது எந்தக் கட்டத்திலும் தகுதிறமுள்ள ஓர் அதிகாரஅமைப்பு, அந்த விசாரணையின் நோக்கத்திற்காக அந்த இளைஞரின் வருகை இன்றியமையாதது அன்று, என்று தெளிவுறக்காணுமாயின், தகுதிறமுள்ள அந்த அதிகாரஅமைப்பு, அவரது வருகையை வேண்டாமென விட்டுவிட்டு, அந்த இளைஞர் இல்லாத நிலையில் அந்த விசாரணையை மேல்நடத்தலாம்.

**கேடுபயக்கும் நோயால் வருந்துகிற இளைஞரை ஒப்பேற்பளிக்கப்பட்ட இடத்திற்கு அனுப்புதல் மற்றும் அவரது எதிர்காலத்திற்கு வகை செய்தல்.**

31. (1) இந்தச்சட்டத்தின்படி, ஒரு தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பின் முன்பு கொண்டுவரப்பட்டிருக்கிற ஓர் இளைஞர் நீடித்த மருத்துவப் பண்டுவம் வேண்டப்படுகிற ஒரு நோயால் அல்லது பண்டுவத்தை ஏற்குந் தன்மையுள்ள, உடல் அல்லது மனநலக்குறையால் வருந்துவதாகக் காணப்படுகிறபோது தகுதிறமுள்ள அந்த அதிகாரஅமைப்பு, வேண்டப்படும் பண்டுவத்திற்காக, அது தேவையெனக் கருதும் காலஅளவுக்கு இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளுக்கு இணங்கியவாறு ஒப்பேற்பளிக்கப்பட்ட ஓர் இடமாக ஏற்பளிக்கப்பட்ட ஏதேனும் இடத்திற்கு அந்த இளைஞரை அனுப்பலாம்.

(2) ஓர் இளைஞர், தொழுநோயால் வருந்துவதாக காணப்படுகிற அல்லது மனக்கோளாறு உடையவராக இருக்கிற இடத்து, தொழுநோயர்கள் சட்டம், 1898இன் அல்லது, நேர்வுக்கேற்ப, இந்தியப் பித்துநிலைச் சட்டம், 1912இன் வகைகளின்படி அவர்மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். 3/1898 4/1912

(3) தொற்று அல்லது ஒட்டு நோய் ஒன்றினால் வருந்துகின்ற இளைஞர் ஆகும் நேர்வில், தகுதிறமுள்ள ஓர் அதிகாரஅமைப்பு, உட்பிரிவு (1)ன்படி நடவடிக்கை எடுத்திருக்கிறவிடத்து, தகுதிறமுள்ள அந்த அதிகாரஅமைப்பு, மேற்சொன்ன இளைஞரின் திருமணத்துணைவர் இருந்துவருவராயின், அவரிடம், அல்லது, நேர்வுக்கேற்ப, காப்பாளரிடம் மீண்டும் ஒப்படைக்கும் முன்பு, மேற்சொன்ன இளைஞரின் நலத்திற்கானதாய் அத்தகைய நடவடிக்கை இருக்கும் என்று அது தெளிவுறக்காணுமிடத்து, மருத்துவ ஆய்வுக்கு இடங்கொடுப்பதன் வாயிலாக எந்த இளைஞரைப் பொறுத்து ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதோ அந்த இளைஞருக்கு அத்தகைய துணைவர் அல்லது காப்பாளர் மீண்டும் தொற்றச்செய்ய மாட்டார் என்று தகுதிறமுள்ள அந்த அதிகாரஅமைப்பைத் தெளிவுறக் காணச் செய்யுமாறு அவரது திருமணத் துணைவரை அல்லது, நேர்வுக்கேற்ப அந்தக் காப்பளரை வேண்டுறுத்துதல் வேண்டும்,

**வயது பற்றிய துணிபு மற்றும் தீர்மானிப்பு,**

32, (1) இந்தச் சட்டத்தின் வகையங்களில் எவற்றின்படியும் தகுதிறமுள்ள ஓர் அதிகாரஅமைப்பின் முன்பு சான்று கொடுக்கும் நோக்கத்திற்காக அல்லாமல் பிறவாறாக கொண்டுவரப்படும் ஓர் ஆள், ஓர் இளைஞராக இருக்கிறார் என்று அதற்குத் தோன்றுகிறவிடத்து, தகுதிறமுள்ள அந்த அதிகாரஅமைப்பு, அந்த ஆளின் வயது குறித்து உரிய விசாரணை செய்தல்

வேண்டும். மற்றும் அந்த நோக்கத்திற்காகத் தேவைப்படும் சான்றை எடுத்தல் வேண்டும் மற்றும் அந்த ஆள் ஓர் இளைஞராக இருப்பினும் அல்லது இல்லாவிடினும் அவரது வயதைக் கிட்டத்தட்ட எடுத்துரைக்கிற முடிவு ஒன்றைப் பதிவு செய்தல் வேண்டும்,

(2) தகுதிறமுள்ள ஓர் அதிகாரஅமைப்பின் ஆணை எதுவும், எந்த ஆளைப் பொறுத்தும் அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதோ அந்த ஆள், ஓர் இளைஞர் அல்லர் என்ற ஏதேனும் பிந்திய மெய்ப்பிப்பின் வாயிலாக மட்டுமே செல்லாநிலையதாக ஆகியுள்ளதாகக் கருதப்படுதல் ஆகாது, மற்றும் அதன் முன்பு அவ்வாறு கொண்டு வரப்படும் அந்த ஆளின் வயதாக, தகுதிறமுள்ள அந்த அதிகாரஅமைப்பால் பதிவு செய்யப்பட்ட வயது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, அந்த ஆளின் உண்மையான வயதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**இந்தச் சட்டத்தின்படி ஆணைகளைப் பிறப்பிக்கையில் கருத்தில் கொள்ளப்பட வேண்டியசூழ் நிலைகள்.**

33. இந்தச் சட்டத்தின்படி ஓர் இளைஞரைப் பொறுத்து ஏதேனும் ஆணை பிறப்பிக்கையில், தகுதிறமுள்ள ஓர் அதிகாரஅமைப்பு பின்வரும் சூழ்நிலைகளைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளுதல் வேண்டும், அவை யாவன :—

(அ) அந்த இளைஞரின் வயது ;

(ஆ) அந்த இளைஞரின் உடல் மற்றும் மன நல நிலை ;

(இ) அந்த இளைஞர் வாழ்ந்து வந்த மற்றும் வாழ்ந்து வருகின்ற சூழ்நிலைகள் ;

(ஈ) கண்காணிப்பு அலுவலரால் செய்யப்படும் அறிக்கைகள் ;

(உ) அந்த இளைஞரின் சமய நம்பிக்கை ;

(ஊ) அந்த இளைஞரின் நல்வாழ்வின் நலங்கருதி தகுதிறமுள்ள அந்த அதிகாரஅமைப்பின் கருத்துப்படி கவனத்தில் எடுத்துக்கொள்ளப் படுமாறு வேண்டுறுத்தப்படும் பிற சூழ்நிலைகள் :

வரம்புரையாக : குற்றமிழைத்த இளைஞர் ஒருவர் ஆகும் நேர்வில், அவர் குற்றச்செயல் இழைத்துள்ளார் என்று அந்த இளைஞருக்கு எதிராக இளைஞர் நீதிமன்றம் முடிவு ஒன்றைப் பதிவுசெய்த பின்பு, மேலே உள்ள சூழ்நிலைகள், கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும் :

மேலும் வரம்புரையாக : கண்காணிப்பு அலுவலரின் அறிக்கை எதுவும், பிரிவு 19 இன்படி அவருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்து பத்து வாரங்களுக்குள் பெறப்படாதிருப்பின், அது இல்லாமல் மேல் நடத்துவதற்கு அந்த இளைஞர் நீதிமன்றத்திற்கு உரிமையுண்டு.

**அதிகாரவரம்புக்கு வெளியே ஓர்இளைஞரை அனுப்புதல்.**

34. தகுதிறமுள்ள எந்த அதிகாரஅமைப்பின் முன்பு, ஒரு புறக் கணிக்கப்பட்ட அல்லது குற்றமிழைத்த இளைஞர் கொண்டு வரப்படு கிறாரோ தகுதிறமுள்ள அந்த அதிகாரஅமைப்பின் அதிகாரவரம்புக்கு வெளியே அவரது வழக்கமான குடியிருப்பிடம் அமைந்திருக்கும் நேர்வில், தகுதிறமுள்ள அந்த அதிகாரஅமைப்பு, உரிய விசாரணைக்குப் பின்பு அவ்வாறு செய்வது உகந்ததாக இருக்கிறது என்று தெளிவுறக் காணுமாயின் எவர், தமது வழக்கமான குடியிருப்பிடத்தில், இளைஞரை ஏற்றுக்கொள் வதற்கும் அவர் மீது முறையான காப்பு மற்றும் கட்டுப்பாடு செலுத்துவதற் கும் தகுதியானவராகவும் விருப்பமுடையவராகவும் இருக்கிறாரோ அந்த உறவினரிடம் அல்லது பிற ஆளிடம், அத்தகைய குடியிருப்பிடம் தகுதிற முள்ள அதிகாரஅமைப்பின் அதிகாரவரம்பிற்கு வெளியே இருந்தபோதிலும், அவரைத் திரும்ப அனுப்பலாம்; மற்றும் எந்த இடத்திற்கு அந்த இளைஞர் அனுப்பப்படுகிறாரோ அந்த இடத்தின்மீது அதிகாரவரம்பைச் செலுத்துகிற தகுதிறமுள்ள அந்த அதிகாரஅமைப்பு, பிந்தியதாக எழு கின்ற ஏதேனும் பொருட்பாட்டைப் பொறுத்து, முதன்முதலான ஆணை அதனால் பிறப்பிக்கப்பட்டிருந்தாற்போன்றே, அந்த இளைஞர் தொடர் பான அதே அதிகாரங்களை உடையது ஆகும்.

**அறிக்கைகள் மந்தணமான வையாக எடுத்துக் கொள்ளப் படுதல்.**

35. கண்காணிப்பு அலுவலரின் அறிக்கைகள் அல்லது பிரிவு 33இன்படி தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பால் கவனத்தில் கொள்ளப்படும் ஏதேனும் சூழ்நிலை, மந்தணமானவையாக எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும் ;

வரம்புரையாக : தகுதிறமுள்ள அந்த அதிகாரஅமைப்பு, அது அவ்வாறு தக்கதெனக் கருதுமாயின், அந்த இளைஞருக்கு அல்லது அவரது பெற்றோருக்கு அல்லது காப்பாளருக்கு அதன் சாரத்தைத் தெரிவிக்கலாம், மற்றும் அந்த அறிக்கையில் உரைக்கப்பட்ட அந்தப் பொருட்பாட்டிற்குத் தொடர்பற்றதாக இருக்கும் சான்றை முன்னிலைப்படுத்தும் ஒரு வாய்ப்பினை அத்தகைய இளைஞருக்கு, பெற்றோருக்கு அல்லது காப்பாளருக்குக் கொடுக்கலாம்.

**இந்தச் சட்டத்தின்படி, ஏதேனும் நடவடிக்கையில்தொடர்புடையவர்களாயிருக்கும் இளைஞரின் பெயர்கள் முதலானவற்றை வெளியிடுவதற்குத் தடை.**

36. (1) இந்தச் சட்டத்தின்படி ஓர் இளைஞரைப் பற்றிய ஏதேனும் விசாரணையைப் பற்றி ஏதேனும் செய்தித்தாள், இதழ் அல்லது செய்தி ஏட்டில் அறிக்கை எதுவும், அந்த இளைஞரின் பெயர், முகவரி அல்லது பள்ளி அல்லது அவரை அடையாளம் கண்டுகொள்வதற்குக் காரணமாக இருக்குமாறு திட்டமிடப்பட்ட எவையேனும், பிற விவரங்களை வெளிப்படுத்துதல் ஆகாது, அல்லது எவரேனும் அத்தகைய இளைஞரின் ஏதேனும் படம் வெளியிடப்படுதல் ஆகாது :

வரம்புரையாக : எழுத் வடிவில் பதிவுசெய்யப்படவேண்டிய காரணங்களுக்காக, விசாரணை செய்கிற அதிகாரஅமைப்பு, அதனுடைய கருத்தில் அத்தகைய வெளிப்படுத்துதல் அந்த இளைஞரின் நலங்கருதியதாக இருக்குமாயின், அத்தகைய வெளிப்படுத்துதலுக்கு அனுமதியளிக்கலாம்.

(2) உட்பிரிவு (1)இன் வகையங்களை மீறுகிற எவரேனும் ஆள், ஓர் ஆயிரம் ரூபாய் வரை நீடிக்கவாகும் பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப் படத்தக்கவர் ஆவார்.

**மேல்முறையீடுகள்.**

37. (1) இந்தப் பிரிவின் வகையங்களுக்கு உட்பட்டு, இந்தச் சட்டத்தின்படி, தகுதிறமுள்ள ஓர்அதிகாரஅமைப்பால் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையால் குறையுற்ற எவரேனும் ஆள், அத்தகைய ஆணைத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், அமர்வு நீதிமன்றத்திற்கு ஒரு மேல்முறையீடு செய்யலாம் :

வரம்புரையாக: அந்த அமர்வு நீதிமன்றம், உரிய காலத்தில், அந்த மேல்முறையீட்டை முன்னிடுவதிலிருந்து போதுமான காரணத்தால் அந்த மேல்முறையீட்டாளர் தடுக்கப்பட்டார்என்று அது தெளிவுறக்காணுமாயின், மேற்சொன்ன முப்பது நாள் காலஅளவு முடிவடைந்த பின்பு, அந்த மேல்முறையீட்டை ஏற்றுக்கொள்ளலாம்.

(2) (அ) ஒரு குற்றச்செயல் இழைத்திருப்பதாகச் சாட்டுரைக்கப்பட்ட ஓர் இளைஞரைப் பொறுத்து இளைஞர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஏதேனும் விடுதலை ஆணையின்மீது, அல்லது

(ஆ) ஓர் ஆள், புறக்கணிக்கப்பட்ட ஓர் இளைஞர் அல்லர் என்ற ஒரு முடிவைப் பொறுத்து, ஒரு குழுமத்தால் பிறப்பிக்கப்பட்ட ஏதேனும் ஆணையின் மீது

மேல்முறையீடு செய்துகொள்வதற்குஉற்றது ஆகாது.

(3) இந்தப் பிரிவின்படி மேல்முறையீட்டில் பிறப்பிக்கப்பட்ட அமர்வு நீதிமன்றத்தின் ஏதேனும் ஆணையின்மீது இரண்டாம் மேல் முறையீடு செய்துகொள்வதற்கு உற்றது ஆகாது.

**மேலாய்வு.**

38. உயர் நீதிமன்றம் எந்த நேரத்திலும் தானே முற்பட்டோ அல்லது இதற்கென பெறப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் பேரிலோ எந்த நடவடிக்கையில் ஏதேனும் தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு அல்லது அமர்வு நீதிமன்றம், ஓர் ஆணையைப் பிறப்பித்திருக்கிறதோ, அந்த ஏதேனும் நடவடிக்கையின் பதிவுக்கட்டை, அத்தகைய ஏதேனும் ஆணையின் சட்டசிலம் அல்லது முறைமை குறித்துத் தானே தெளிவுறக்காணும் நோக்கத்திற்காக, அனுப்புமாறு கோரலாம் மற்றும் அது தக்கதெனக் கருதுகிற, அதற்குத் தொடர்பான ஆணையைப் பிறப்பிக்கலாம்:

வரம்புரையாக : உயர் நீதிமன்றம், கேட்கப்படுவதற்காக ஒரு தகுமான வாய்ப்பை எவரேனும் ஆளுக்குக் கொடுக்காமல், அவருக்கு ஊறுபாடு செய்யும் வகையில், இந்தப் பிரிவின்படி ஓர் ஆணை பிறப்பித்தல் ஆகாது.

**விசாரணைகள் மேல்முறையீடுகள் மற்றும் மேலாய்வு நடவடிக்கைகளில் நெறிமுறை.**

39. (1) இந்தச் சட்டத்தால் பிறவாறு வெளிப்படையாக வகை செய்யப்பட்டவாறல்லாமல், இந்தச் சட்டத்தின் வகையங்களில் எவற்றின்படியும் ஏதேனும் விசாரணை செய்யுங்கால், தகுதிறமுள்ள ஓர் அதிகாரஅமைப்பு வகுத்துரைக்கப்படும் நெறிமுறையைப் பின்பற்றுதல் வேண்டும், மற்றும் அதற்கு உட்பட்டு, அழைப்பாணை வழக்குகளில் விசாரணை செய்வதற்காக குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இல் விதிக்கப்பட்டுள்ள நெறிமுறையை, எந்த அளவுக்குக் கூடுமோ அந்த அளவுக்குப் பின்பற்றுதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தாலோ அதன் வழியாலோ பிறவாறு வெளிப்படையாக வகைசெய்யப்பட்டவாறல்லாமல், இந்தச் சட்டத்தின்படி மேல்முறையீடுகள் அல்லது மேலாய்வு நடவடிக்கைகளைக் கேட்கையில், பின்பற்றப்படவேண்டிய நெறிமுறையானது, குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இன் வகையங்களுக்கு நடைமுறையில் இயன்ற அளவுக்கு, இணங்கியவாறு இருத்தல் வேண்டும்.

**ஆணைகளைத் திருத்தம் செய்வதற்கான அதிகாரம்.**

40. (1) இந்தச் சட்டத்தின்படியான மேல்முறையீடு மற்றும் மேலாய்வுக்கான வகையங்களுக்கு ஊறுபாடு இன்றி, தகுதிறமுள்ள ஏதேனும் அதிகாரஅமைப்பு தானே முற்பட்டோ அல்லது இதற்கெனப் பெறப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் பேரிலோ இந்தச் சட்டத்தின்படி எந்த நிறுவனத்திற்கும் ஓர் இளைஞர் அனுப்பப்படவிருக்கிறாரோ அந்த நிறுவனம் குறித்து அல்லது எந்த ஆளின் காப்பில் அல்லது மேற்பார்வையில் ஓர் இளைஞர் வைக்கப்படவிருக்கிறாரோ அந்த ஆள் குறித்து ஏதேனும் ஆணையைத் திருத்தம் செய்யலாம்.

(2) தகுதிறமுள்ள ஓர் அதிகாரஅமைப்பால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளில் உள்ள எழுத்தர் தவறுகள் அல்லது ஏதேனும் தற்செயலான பிசகு அல்லது விடுகை காரணமாக அதில் எழுகிற பிழைகள் அல்லது விடுகை, எந்த நேரத்திலும் தானே முற்பட்டோ அல்லது இதற்கெனப் பெறப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் பேரிலோ தகுதிறமுள்ள அந்த அதிகாரஅமைப்பால் திருத்தப்படலாம்.

## அத்தியாயம் VI

### இளையோரைப் பொறுத்துத் தனியுறு குற்றச்செயல்கள்

**இளைஞரைக் கொடுமைப் படுத்துவதற்கான தண்டனை.**

41. (1) ஓர் இளைஞரை உள்ளபடியான பொறுப்பில் அல்லது அவர்மீது கட்டுப்பாடு கொண்டிருந்து, அந்த இளைஞரைத் தாக்க முனைகிற, கைவிடுகிற, வெளிப்படுத்துகிற அல்லது வேண்டுமென்றே புறக்கணிக்கிற அல்லது அத்தகைய இளைஞருக்கு தேவையற்ற மன அல்லது உடல் வருத்தத்தைப் பெரும்பாலும் ஏற்படுத்துகிற ஒரு முறையில், தாக்க முனையப்படுமாறு, கைவிடப்படுமாறு, வெளிப்படுத்துமாறு அல்லது புறக்கணிக்கப்படுமாறு செய்கிற அல்லது செய்விக்கிற எவராயினும், ஆறு திங்கள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குச் சிறைத்தண்டனையோ, அல்லது பணத்தண்டமோ, அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

(2) நீதிமன்றம் எதுவும், மாநில அரசாங்கத்தின் அல்லது இதற்கென அதனால் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலரின் முன் ஒப்பளிப்புடன் முறையீடு முன்னிடப்பட்டாலன்றி, உட்பிரிவு (1) இன்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் ஒன்றை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் ஆகாது.

**இளையோரை வேலைக்கு அமர்த்துதல்.**

42. (1) பிச்சை கேட்கும் நோக்கங்களுக்காக எவரேனும் பிச்சை இளைஞரை வேலைக்கமர்த்துகிற அல்லது பயன்படுத்துகிற அல்லது கேட்டலுக்காக எவரேனும் இளைஞரைப் பிச்சை கேட்குமாறு செய்விக்கிற எவராயினும், மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்கு சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார், மற்றும் பணத்தண்டத்திற்கும் உள்ளாக்கப்படுவார்.

(2) ஓர் இளைஞரை உள்ளபடியான பொறுப்பில் அல்லது அவர்மீது கட்டுப்பாடு கொண்டிருந்து, உட்பிரிவு (1) இன்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் இழைக்க உடந்தையாயிருக்கிற எவராயினும், ஓர் ஆண்டு வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குச் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார் மற்றும் பணத்தண்டத்திற்கும் உள்ளாக்கப்படுவார்.

(3) இந்தப் பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயலானது, பிடியாணையின்றிக் கைது செய்வதற்குரியது ஆகும்.

ஓர் இளைஞருக்கு வெறியூட்டும் மது அல்லது மயக்கும் மருந்துப் பொருள் அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருளைக் கொடுப்பதற்கான தண்டனை.

43. உரிய தகுதிப்பாடுடைய ஒரு மருத்துவத் தொழிலாற்றுநரின் ஆணையின் பேரில் அல்லது பிணியுடைமை ஆகும் நேர்வில் தவிர, ஒரு பொது இடத்தில் ஏதேனும் வெறியூட்டும் மதுவை அல்லது ஏதேனும் மயக்கும் மருந்தை அல்லது மனநிலைக்கு ஊறு செய்யும் பொருளை எவரேனும் இளைஞருக்குக் கொடுக்கிற அல்லது கொடுக்கப்படுமாறு செய்விக்கிற எவராயினும் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குச் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார், மற்றும் பணத்தண்டத்திற்கும் உள்ளாக்கப்படுவார்.

பணிக்கமர்த்தப்பட்டவர்களான இளைஞர் சுரண்டப்படுதல்.

44. ஏதேனும் பணியமர்த்தத்தின் நோக்கத்திற்காக ஓர் இளைஞரை வெளிப்படையாக முயன்று பெறுகிற மற்றும் அந்த இளைஞரின் ஈட்டங்களைக் கொடுக்காமல் வைத்துக்கொள்கிற அல்லது தனது சொந்த நோக்கங்களுக்காக அத்தகைய ஈட்டங்களைப் பயன்படுத்துகிற எவராயினும், மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குச் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார், மற்றும் பணத்தண்டத்திற்கும் உள்ளாக்கப்படுவார்.

மாற்றுத் தண்டனைகள்.

45. ஒரு செயல் அல்லது விடுகை இந்தச் சட்டத்தின்படியும் ஏதேனும் பிற மைய அல்லது மாநிலச் சட்டத்தின்படியும் கூட தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றச்செயலாக அமைகிறவிடத்து அப்போது, நிகழுறுகாலத்தில் செல்லாற்றலிலுள்ள ஏதேனும் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தகைய குற்றச்செயலை இழைத்தவர் என்று முடிவு செய்யப்பட்ட குற்றவாளி, எந்தத் தண்டனை, படிநிலையில் மிகுதியானதாக இருக்கிறதோ அந்தத் தண்டனைக்கு வகைசெய்கிற சட்டத்தின்படி மட்டும் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்.

## அத்தியாயம் VII

### பலவகைப்பட்டவை

இளையோரை விடுவிப்பதற்கும் மாற்றல் செய்வதற்கும் மாநில அரசாங்கத்தின் அதிகாரம்.

46. (1) மாநில அரசாங்கம், இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், எந்த நேரத்திலும், ஒரு புறக்கணிக்கப்பட்ட அல்லது குற்றமிழைத்த இளைஞர், இளைஞர் இல்லத்திலிருந்து அல்லது சிறப்பு இல்லத்திலிருந்து வரைக்கட்டில்லாமலோ அல்லது சுமத்துவதற்கு அது தக்கதெனக் கருதும் வரைக்கட்டுகளின் பேரிலோ விடுவிக்கப்படுமாறு ஆணையிடலாம்.

(2) மாநில அரசாங்கம், இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும்,—

(அ) புறக்கணிக்கப்பட்ட ஓர் இளைஞர், ஓர் இளைஞர் இல்லத்திலிருந்து பிறிதொன்றுக்கு மாற்றல் செய்யப்படுமாறு,

(ஆ) குற்றமிழைத்த ஓர் இளைஞர், ஒரு சிறப்பு இல்லத்திலிருந்து பிறிதொன்றுக்கு அல்லது ஒரு சிறப்பு இல்லத்திலிருந்து, ஓர் இளங் குற்றவாளிகள் சீர்திருத்தப்பள்ளி இருந்து வருகிறவிடத்து, அத்தகைய பள்ளிக்கு அல்லது ஒரு சிறப்பு இல்லத்திலிருந்து ஓர் இளைஞர் இல்லத்திற்கு மாற்றல் செய்யப்படுமாறு,

(இ) புறக்கணிக்கப்பட்ட ஓர் இளைஞர் அல்லது குற்றமிழைத்த இளைஞர் ஒருவர், ஓர் இளைஞர் இல்லத்திலிருந்து அல்லது ஒரு சிறப்பு இல்லத்திலிருந்து ஒரு தகுந்த ஆளுக்கு அல்லது ஒரு தகுந்த நிறுவனத்திற்கு மாற்றல் செய்யப்படுமாறு,

(ஈ) எந்த உரிமம் முறித்தறவு செய்யப்பட்டிருக்கிறதோ அல்லது தண்டமாக இழக்கப்பட்டிருக்கிறதோ அந்த உரிமத்தின்மீது விடுவிக்கப்பட்டிருக்கிற ஓர் இளைஞர், எந்தச் சிறப்பு இல்லத்திலிருந்து அல்லது இளைஞர் இல்லத்திலிருந்து அவர் விடுவிக்கப்பட்டாரோ அந்தச் சிறப்பு இல்லத்திற்கு அல்லது இளைஞர் இல்லத்திற்கு, அல்லது ஏதேனும் பிற இளைஞர் இல்லத்திற்கு, அல்லது சிறப்பு இல்லத்திற்கு, அல்லது இளங் குற்றவாளிகள் சீர்திருத்தப்பள்ளிக்கு அனுப்பப்படுமாறு, ஆணையிடலாம்:

வரம்புரையாக: ஓர் இளைஞர் இல்லத்தில், அல்லது ஒரு சிறப்பு இல்லத்தில், அல்லது ஒரு தகுந்த நிறுவனத்தில், அல்லது ஒரு தகுந்த ஆளின்கீழ் அந்த இளைஞர் தங்கியிருக்கும் மொத்தக் காலஅளவு, அத்தகைய மாற்றல் வாயிலாக மிகுவிக்கப்படுதல் ஆகாது.

(3) மாநில அரசாங்கம், இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், எந்த நேரத்திலும், எந்த ஆளின்கீழ் ஓர் இளைஞர் இந்தச் சட்டத்தின்படி வைக்கப்பட்டாரோ அந்த எவரேனும் ஆளின் காப்பிலிருந்து வரைக்கட்டில்லாமலோ அல்லது சுமத்துவதற்கு அது தக்கதெனக் கருதும் வரைக்கட்டுகளின் பேரிலோ அவரை விடுவிக்கலாம்.

47. (1) ஒரு மாநில அரசாங்கம், எவரேனும் புறக்கணிக்கப்பட்ட இளைஞர் அல்லது குற்றமிழைத்த இளைஞர், அந்த மாநிலத்திற்குள் உள்ள ஏதேனும் இளைஞர் இல்லத்திலிருந்து அல்லது சிறப்பு இல்லத்திலிருந்து, ஏதேனும் பிற மாநிலத்தில் உள்ள ஓர் ஒத்த தன்மையதான ஏதேனும் பிற இளைஞர் இல்லத்திற்கு, சிறப்பு இல்லத்திற்கு அல்லது நிறுவனத்திற்கு அந்த மாநில அரசாங்கத்தின் இசைவுடன் மாற்றல் செய்யப்படுமாறு பணிக்கலாம்.

(2) ஒரு மாநில அரசாங்கம், பொது அல்லது சிறப்பு ஆணை வாயிலாக, மாநிலத்திற்குள் உள்ள ஓர் இளைஞர் இல்லத்தில் அல்லது சிறப்பு இல்லத்தில் ஏதேனும் பிற மாநிலத்திலுள்ள ஓர் ஒத்த தன்மையதான ஓர் இளைஞர் இல்லத்தில் அல்லது சிறப்பு இல்லத்தில் அல்லது நிறுவனத்தில் காவலில் வைக்கப்பட்ட ஒரு புறக்கணிக்கப்பட்ட இளைஞரை அல்லது குற்றமிழைத்த இளைஞரை அந்த மாநில அரசாங்கம் அத்தகைய மாற்றலுக்காக ஓர் ஆணை பிறப்பிக்கிற விடத்து, ஏற்றுக்கொள்வதற்கு வகைசெய்யலாம், மற்றும் அத்தகைய மாற்றலின் பேரில், இந்தச் சட்டத்தின் வகைகள், இந்த சட்டத்தின்படி அத்தகைய இளைஞர் இல்லத்திற்கு அல்லது சிறப்பு இல்லத்திற்கு அனுப்பப் படுவதற்கு அவருக்கு முதன் முதலில் ஆணையிடப்பட்டிருந்தாற்போன்றே, அத்தகைய இளைஞருக்குப் பொருந்துறுதல் வேண்டும்.

இந்தச் சட்டத்தின்படி இளைஞர் இல்லங்கள் முதலியன வற்றுக்கும் இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள ஒத்த தன்மையதான இளைஞர் இல்லங்கள் முதலியனவற்றுக்கும் இடையே செய்யப்படும் மாற்றல்கள்.

48. (1) இந்தச் சட்டத்தை ஒட்டி ஒரு சிறப்பு இல்லத்தில் அல்லது இளைஞர் இல்லத்தில் அல்லது நிறுவனத்தில் வைத்துவரப் பட்ட எவரேனும் இளைஞர் தொழுநோயால் வருந்துகிறார் அல்லது மனக்கோளாறு உடையவராயிருக்கிறார் அல்லது ஏதேனும் மயக்கும் மருந்துக்கு அல்லது மனநிலைக்கு ஊறுசெய்யும் பொருளுக்கு அடிமை யாகி இருக்கிறார் என்று மாநில அரசாங்கத்திற்குத் தோன்றுகிற விடத்து, அந்த மாநில அரசாங்கம், எந்தக் காலஅளவுக்கு தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பின் ஆணைகளின்படி, அவர் பாதுகாப்பில் வைத்துவரப்படுவதற்கு வேண்டுறுத்தப்படுகிறாரோ அந்தக் கால அளவுக்கு மேற்படாத காலஅளவுக்கு, அல்லது அந்த இளைஞரின் முறையான பண்டுவத்திற்குத் தேவைப்படுவதாக மருத்துவ அலுவ ரால் உறுதிச்சான்றளிக்கப்படும் மேலுமான காலஅளவுக்கு ஒரு தொழு நோயர் காப்பகத்தில் அல்லது மனநோய் மருத்துவமனையில் அல்லது மருந்துப்பொருள் அடிமையாளர்களுக்கான பண்டுவ மையத்தில் அல்லது பிற பத்திரமான பாதுகாப்பு இடத்தில் வைத்துவரப்படுவதற்காக அவர் அகற்றப்படுவதற்கு ஆணையிடலாம்.

மனக்கோளாறு உடைய அல்லது தொழு நோயால் வருந்துகிற அல்லது மருந்துப் பொருள்களுக்கு அடிமையான இளைஞரை மாற்றல்.

(2) அந்த இளைஞர் தொழுநோயில் அல்லது மனக்கோளாறில் இருந்து அல்லது மருந்துப்பொருளுக்கு அடிமையாக இருப்பதிலிருந்து நலமடைந்திருக்கிறார் என்று மாநில அரசாங்கத்திற்குத் தோன்று கிறவிடத்து, அந்த இளைஞர், பாதுகாப்பில் வைத்துவரப்படுவதற்கு இன்னமும் உள்ளவராயின், எந்தச் சிறப்பு இல்லத்திலிருந்து அல்லது இளைஞர் இல்லத்திலிருந்து அலலது நிறுவனத்திலிருந்து அவர் அகற்றப் பட்டாரோ அந்தச் சிறப்பு இல்லத்திற்கு அல்லது இளைஞர் இல்லத்திற்கு அல்லது நிறுவனத்திற்கு அவரை அனுப்புவதற்கு அந்த இளைஞரைப் பொறுப்பில் கொண்டிருக்கின்ற ஆளுக்கு ஆணையிடலாம், அல்லது அந்த இளைஞர் பாதுகாப்பில் வைத்துவரப்படுவதற்கு இனிமேலும் உள்ளாகா திருப்பாராயின், அவர் விடுவிக்கப்படுவதற்கு ஆணையிடலாம்.

உரிமத்தின் பேரில் வெளியே தங்கவைத்தல்.

49. (1) ஓர் இளைஞர், ஓர் இளைஞர் இல்லத்தில் அல்லது சிறப்பு இல்லத்தில் வைத்துவரப்படுகிறபோது, மாநில அரசாங்கம், அது அவ்வாறு தக்கதெனக் கருதுமாயின், அந்த இளைஞர் இல்லத்திலிருந்து அல்லது சிறப்பு இல்லத்திலிருந்து அந்த இளைஞரை விடுவிக்கலாம், மற்றும் அவருக்குக் கல்வியளித்து ஏதேனும் பயனுடைய வாணிகம் அல்லது தொள்பணிக்காக அவரைப் பயிற்றுவிக்கும் நோக்கத்துடன் அவரை ஏற்றுக்கொள்வதற்கும் பொறுப்பில் எடுத்துக் காள்வதற்கும் விரும்புகிற, உரிமத்தில் பெயர் குறிக்கப்பட்ட எவரேனும் பொறுப்புடைய ஆளுடன் அல்லது அவரது மேற்பார்வையின்கீழ் வாழ்வதற்கு அவருக்கு அனுமதியளிக்கிற, உரிமத்தில் குறித்துரைக்கப்படும் காலஅளவுக்கு மற்றும் வரைக்கட்டுகளின்பேரில், எழுத்துவடிவில் ஓர் உரிமத்தை அவருக்கு வழங்கலாம்.

(2) உட்பிரிவு (1)இன்படி அவ்வாறு வழங்கப்பட்ட ஏதேனும் உரிமம், அந்த உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட காலஅளவுக்கு அல்லது எந்த வரைக்கட்டுகளின்பேரில் அது வழங்கப்பட்டதோ அந்த வரைக்கட்டுக்களில் எவற்றின் மீறுகையாலும் முறித்தறவு செய்யப்படும் அல்லது தண்டமாக இழக்கப்படும் வரையில் செல்லாற்றல்பெறும்.

(3) மாநில அரசாங்கம், எந்த நேரத்திலும், எழுத்து வடிவிலான ஆணையின் வாயிலாக ஏதேனும் அத்தகைய உரிமத்தை முறித்தறவு செய்யலாம், மற்றும் எந்த இளைஞர் இல்லத்திலிருந்து அல்லது சிறப்பு இல்லத்திலிருந்து அந்த இளைஞர் விடுவிக்கப்பட்டாரோ அந்த இளைஞர் இல்லத்திற்கு அல்லது சிறப்பு இல்லத்திற்கு அல்லது ஏதேனும் பிற இளைஞர் இல்லத்திற்கு அல்லது சிறப்பு இல்லத்திற்கு அவர் திரும்பிச் செல்லுமாறு ஆணையிடலாம், மற்றும் எந்த ஆளுடன் அல்லது எவரது மேற்பார்வையில் அந்த இளைஞர் உட்பிரிவு (1)இன்படி வழங்கப்பட்ட ஓர் உரிமத்திற்கு இணங்கியவாறு வாழ்வதற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறாரோ அந்த ஆளின் விருப்பத்தின்படி அவ்வாறு செய்தல் வேண்டும்.

(4) ஓர் உரிமம் முறித்தறவு செய்யப்பட்டிருந்து அல்லது தண்டமாக இழக்கப்பட்டிருந்து எந்தச் சிறப்பு இல்லத்திற்கு அல்லது இளைஞர் இல்லத்திற்கு அந்த இளைஞர் அவ்வாறு திரும்பச் செல்லுமாறு பணிக்கப்பட்டாரோ அந்தச் சிறப்பு இல்லத்திற்கு அல்லது இளைஞர் இல்லத்திற்குத் திரும்பச்செல்வதற்கு அவர் மறுக்கிற அல்லது தவறுகிறபோது, மாநில அரசாங்கம், தேவைப்படுமாயின், அவர் பொறுப்பில் எடுத்துக்கொள்ளப்படுமாறும், அந்தச் சிறப்பு இல்லத்திற்கு அல்லது இளைஞர் இல்லத்திற்குத் திரும்பக்கொண்டு செல்லப்படுமாறும் செய்விக்கலாம்.

(5) எந்தக் காலத்தின்போது ஓர் இளைஞர், இந்தப் பிரிவின்படி வழங்கப்பட்ட ஓர் உரிமத்தை ஒட்டி ஒரு சிறப்பு இல்லத்திற்கு வராதிருக்கிறாரோ அந்தக் காலம், அந்தச் சிறப்பு இல்லத்தில் அல்லது இளைஞர் இல்லத்தில் பாதுகாப்பில் வைக்கப்படுவதற்கு அவர் உள்ளாகிற காலத்தின் பகுதியாக இருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக: அந்த உரிமம் முறித்தறவு செய்யப்படுகிறதன் அல்லது தண்டமாக இழக்கப்படுகிறதன்பேரில், அந்தச் சிறப்பு இல்லத்திற்கு அல்லது இளைஞர் இல்லத்திற்கு, ஓர் இளைஞர் திரும்பச் செல்வதற்குத் தவறியுள்ளபோது, அவ்வாறு திரும்பச்செல்ல அவர் தவறியதற்குப் பின்பு, கடந்திருக்கிற காலம், எந்தக் காலத்தின்போது அவர் பாதுகாப்பில் வைத்து வரப்படுவதற்கு உள்ளாகியிருக்கிறாரோ அந்தக் காலத்தைக் கணக்கிடுகையில் நீக்கப்படுதல் வேண்டும்.

தப்பியோடிய இளையோரைப் பொறுத்து வகைகம்.

50. நிகழுறுகாலத்தில் செல்லாற்றலிலுள்ள ஏதேனும் பிற சட்டத்தில் அடங்கியுள்ளதற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், ஒரு சிறப்பு இல்லத்திலிருந்து அல்லது ஓர் இளைஞர் இல்லத்திலிருந்து அல்லது இந்தச் சட்டத்தின்படி அவர் எந்த ஆளின்கீழ் காப்பில் வைக்கப்பட்டாரோ அந்த ஆளின் காப்பிலிருந்து தப்பியோடியுள்ள ஓர் இளைஞரைப் பிடியாணையின்றி, எவரேனும் காவல் அலுவலர் பொறுப்பில் எடுத்துக்கொள்ளலாம், மற்றும், நேர்வுக்கேற்ப, அந்தச் சிறப்பு இல்லத்திற்கு அல்லது அந்த இளைஞர் இல்லத்திற்கு அல்லது அந்த ஆளிடம் அந்த இளைஞரைத் திரும்ப அனுப்புதல் வேண்டும்; மற்றும் அத்தகைய தப்பியோடுகையின் காரணத்தினால் அந்த இளைஞரைப் பொறுத்து நடவடிக்கை எதுவும், தொடரப்படுதல் ஆகாது, ஆனால், அந்தச் சிறப்பு இல்லம், இளைஞர் இல்லம் அல்லது அந்த ஆள், அந்த இளைஞரைப் பொறுத்து ஆணை பிறப்பிக்கப்பட்ட தகுதிறமுள்ள அதிகாரஅமைப்புக்குச் செய்தி அளித்த பின்பு, அந்த இளைஞருக்கு எதிராகத் தேவையெனக் கருதும் நடவடிக்கைகளை எடுக்கலாம்.

51. (1) புறக்கணிக்கப்பட்ட ஓர் இளைஞரை அல்லது குற்ற மிழைத்த இளைஞர் ஒருவரை ஓர் இளைஞர் இல்லத்திற்கு அல்லது ஒரு சிறப்பு இல்லத்திற்கு அனுப்புவதற்காக அல்லது அந்த இளைஞரை ஒரு தகுந்த ஆளின் அல்லது தகுந்த நிறுவனத்தின் காப்பின்கீழ் இருத்தலுக்காக ஓர் ஆணையைப் பிறப்பிக்கிற தகுதிற முள்ள அதிகாரஅமைப்பு, பெற்றோரை அல்லது இளைஞரைப் பேணி வருவதற்குக் கடப்பாடுடைய பிற ஆளை அவரது பேணுகைக்கு வகுத்துரைக்கப்பட்ட முறையில் பங்களிக்க இயலுமாயின், அவ்வாறு செய்யுமாறு வேண்டுறுத்துகிற ஓர் ஆணையைப் பிறப்பிக்கலாம். பெற்றோர் களால் அளிக்கப்படும் பங்களிப்பு.

(2) தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு, உட்பிரிவு (1)இன்படி ஏதேனும் ஆணையைப் பிறப்பிக்கும் முன்பு, பெற்றோரின் அல்லது அந்த இளைஞரைப் பேணிவருவதற்குக் கடப்பாடுடைய பிற ஆளின் சூழ்நிலைகளை விசாரித்தல் வேண்டும், மற்றும் அந்தப் பெற்றோரின் அல்லது, நேர்வுக்கேற்ப, அத்தகைய பிற ஆளின் முன்னிலையில் சான்று, ஏதேனுமிருப்பின், அதை, பதிவு செய்தல் வேண்டும்.

3, ஓர் இளைஞரைப் பேணிவருவதற்குக் கடப்பாடுடைய ஆள் என்பது, உட்பிரிவு (1)இன் நோக்கங்களுக்காக, முறையிலா மணப் பிறப்பு ஆகும் நேர்வில், அவருடைய தந்தையென்று கருதப்படுகிற வரையும் உள்ளடக்கும் :

வரம்புரையாக : அந்த இளைஞர் முறையிலா மணப்பிறப் பாக இருந்து, குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன் பிரிவு 125இன்படி அவரது பேணுகைக்காக ஓர் ஆணை பிறப்பிக் கப்பட்டிருக்கிறவிடத்து, தகுதிறமுள்ள அந்த அதிகாரஅமைப்பு, தந்தை யென்று கருதப்படுகிறவருக்கு எதிரான பங்களிப்புக்காக வழக்கமாக ஓர் ஆணை பிறப்பித்தல் ஆகாது, ஆனால், மேற்சொன்ன பேணுகை ஆணையின்படி கொடுபடவேண்டியதாகச் சேர்ந்தடைகிற பணத் தொகை முழுவதும் அல்லது அதன் ஏதேனும் பகுதி தகுதிற முள்ள அதிகாரஅமைப்பால் பெயர்குறிக்கப்படும் ஆளுக்குச் செலுத் தப்படுமாறு ஆணையிடலாம், மற்றும் அத்தகைய பணத்தொகை, அந்த இளைஞரின் பேணுகைக்காக அவரால் செலுத்தப்படுதல் வேண்டும்.

2/1974 (4) இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஏதேனும் ஆணை குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இன் பிரிவு 125 இன்படியான ஓர் ஆணையைப் போன்ற அதே முறையில் செயலுறுத் தப்படலாம்.

52. (1) மாநில அரசாங்கம், இந்தச் சட்டத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட இளைஞரின் நல்வாழ்வுக்காகவும் மறுவாழ்வுக்காக வும் அது தக்கதெனக் கருதுகிற பெயரின் கீழ் ஒரு நிதியத்தைத் தோற் றுவிக்கலாம். நிதியம்.

(2) எவரேனும் தனிப்பட்டவரால் அல்லது ஏதேனும் அமைப் பால் அளிக்கப்படும் தம் விருப்பான நன்கொடைகள், பங்களிப்பு கள், அல்லது தொகையளிப்புகள் அந்த நிதியத்தில் வரவு வைக்கப்படு தல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1)இன்படி தோற்றுவிக்கப்பட்ட நிதியம், வகுத்- துரைக்கப்படும் முறையிலும் நோக்கங்களுக்காகவும் அலுவலர்களால் அல்லது அதிகாரஅமைப்பால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

53. (1) மாநில அரசாங்கம், இல்லங்களை நிறுவிப் பேணிவருதல், வளவாயில்களைத் திரட்டுதல், புறக்கணிக்கப்பட்ட மற்றும் குற்ற மிழைத்த இளையோரின் கல்விக்கான, பயிற்சிக்கான மற்றும் மறு வாழ்விற்கான வசதிகளுக்கு வகையம் மற்றும் பல்வேறு அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சார்பற்ற தொடர்புடைய முகவாண்மைகளுக் கிடையே ஒருங்கிணைப்பு தொடர்பான பொருட்பாடுகள் மீது அதற்கு அறிவுரை வழங்குவதற்கு ஓர் அறிவுரைக் குழுவை அமைக்கலாம். அறிவுரைக்குழு.

(2) அந்த அறிவுரைக்குழு, மாநில அரசாங்கம் தக்கதெனக் கருதும் எண்ணிக்கையிலான அலுவலர்களையும் பிற ஆட்களையும் கொண்டிருத்தல் வேண்டும். மற்றும் தொடர்புற்ற பரப்பிடங்களில் ஈடு பட்ட தன்னிச்சையான அமைப்புகளின் வல்லுநர்களையும் சார்பாற்று நர்களையும் கூட உள்ளடக்கும்.

**பார்வையாளர்கள்.**

54. (1) மாநில அரசாங்கம், இந்தச் சட்டத்தின்படி நிறுவப்பட்ட இல்லங்களில் ஒவ்வொன்றுக்காகவும், மூவருக்கு மேற்படாத அலுவல் சார்பற்றவர்களைப் பார்வையாளர்களாக இருப்பதற்கு நியமனம் செய்யலாம்.

(2) உட்பிரிவு (1)இன்படி ஓர் இல்லத்திற்காக நியமனம்செய்யப் பட்ட ஒரு பார்வையாளர், அத்தகைய இல்லத்தைக் காலமுறையாகப் பார்வையிடுதலும், மாநில அரசாங்கத்திற்கு ஓர் அறிக்கை செய்தலும் வேண்டும்.

**இளைஞரின்மீது பொறுப்பாளரின் கட்டுப்பாடு.**

55. இந்தச் சட்டத்தை ஒட்டி எவரது பாதுகாப்பில் ஓர் இளைஞர் வைக்கப்படுகிறாரோ அந்த எவரேனும் ஆள், ஆணை செல்லாற்றலில் இருக்குங்கால், அவர், அவருடைய பெற்றோராக இருப்பாராயின், அவர் கொண்டிருக்கக்கூடியதைப் போன்ற அதே கட்டுப்பாட்டை அந்த இளைஞர் மீது கொண்டிருப்பார், மற்றும் அவரது பேணுகைக்குப் பொறுப்புடையவர் ஆவார். மற்றும் அந்த இளைஞர் அவரது பெற்றோரால் அல்லது எவரேனும் பிற ஆளால் கோரப்படுகிறார் என்ற போதிலும், தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பால் உரைக்கப்பட்ட கால அளவுக்கு அவரது பாதுகாப்பில் அவர் தொடர்ந்து இருத்தல் வேண்டும்:

வரம்புரையாக : இளைஞர் எவரும், அத்தகைய பாதுகாப்பில் இருக்குங்கால், தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பின் அனுமதியுடன் தவிர கொண்டு செல்லப்படுதல் ஆகாது.

**இந்தச்சட்டத்தின் தொடக்க நிலையில் தண்டனையை அனுபவிக்கிற குற்றமிழைத்த இளைஞர்.**

56. இந்தச் சட்டம் செல்லாற்றலுக்குக் கொண்டுவரப்படுகிற ஏதேனும் பரப்பிடத்தில், இந்தச் சட்டத்தின் தொடக்க நிலையில், சிறைத் தண்டனை அனுபவிக்கிற குற்றமிழைத்த இளைஞர் ஒருவர் அத்தகைய தண்டனையை அனுபவிப்பதற்கு மாற்றாக தண்டனையின் எஞ்சிய கால அளவுக்கு ஒரு சிறப்பு இல்லத்திற்கு அனுப்பப்படுதல் அல்லது மாநில அரசாங்கம் தக்கதெனக் கருதும் இடத்தில் மற்றும் முறையில் பத்திரமான பாதுகாப்பில் வைக்கப்படுதல் வேண்டும் என்று மாநில அரசாங்கம் பணிக்கலாம்; மற்றும் இந்தச் சட்டத்தின் வகையங்கள், அத்தகைய சிறப்பு இல்லத்திற்கு அனுப்பப்படுவதற்காக ஓர் இளைஞர் நீதிமன்றத்தால், அந்த இளைஞருக்கு ஆணையிடப்பட்டிருந்தாற்போன்றே அல்லது, நேர்வுக்கேற்ப, பிரிவு 22 இன் உட்பிரிவு (2) இன்படி காவலில் வைக்கப்படுவதற்கு ஆணையிடப்பட்டிருந்தாற்போன்றே, அவருக்குப் பொருந்துறுதல் வேண்டும்.

**அலுவலர்களின் அமர்த்துகை.**

57. (1) மாநில அரசாங்கம், இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அது தேவையெனக் கருதும் எண்ணிக்கையில் கண்காணிப்பு அலுவலர்களை, சிறப்பு இல்லங்கள், இளைஞர் இல்லங்கள், கூர்நோக்கு இல்லங்கள் அல்லது பிற்காப்பு அமைப்புக்கள் ஆய்வு செய்வதற்கான அலுவலர்களை மற்றும் அத்தகைய பிற அலுவலர்களை அமர்த்தலாம்.

(2) (அ) விசாரணை செய்கையில் தகுதிறமுள்ள அந்த அதிகார அமைப்புக்கு உதவும் நோக்கத்துடன் ஒரு குற்றச்செயலுக்காக குற்றஞ்சார்த்தப்பட்ட எவரேனும் இளைஞரின் முன்னடத்தை மற்றும் அவரது குடும்ப வரலாறு பற்றி தகுதிறமுள்ள ஓர் அதிகாரஅமைப்பின் பணிப்புரைக்கு இணங்கியவாறு விசாரணை செய்வது,

(ஆ) கண்காணிப்பு அலுவலர் தக்கதெனக் கருதும் கால இடைவெளிகளில் புறக்கணிக்கப்பட்ட மற்றும் குற்றமிழைத்த இளையோரைப் பார்வையிடுவது,

(இ) புறக்கணிக்கப்பட்ட அல்லது குற்றமிழைத்த எவரேனும் இளைஞரின் நடத்தை குறித்து; தகுதிறமுள்ள அதிகார அமைப்பிற்கு அறிக்கைசெய்வது,

(ஈ) புறக்கணிக்கப்பட்ட அல்லது குற்றமிழைத்த இளையோருக்கு அறிவுரை வழங்கி உதவுவது மற்றும் தேவைப்படுமாயின், அவர்களுக்குப் பொருத்தமான பணியமர்த்தத்தைக் கண்டறியப் பெருமுயற்சி செய்வது,

(உ) புறக்கணிக்கப்பட்ட அல்லது குற்றமிழைத்த இளைஞர் ஒருவர், சில வரைக்கட்டுகளின் பேரில், எவரேனும் ஆளின் அல்லது ஏதேனும் நிறுவனத்தின் காப்பின் கீழ் வைக்கப்படுகிறவிடத்து, அத்தகைய வரைக்கட்டுகளுக்கு இணங்கி நடக்கப்படுகின்றனவா என்று பார்ப்பது, மற்றும்

(ஊ) வகுத்துரைக்கப்படும் பிற கடமைகளைப் புரிவது

கண்காணிப்பு அலுவலரின் கடமையாகும்.

(3) மாநில அரசாங்கத்தால் இதற்கென அதிகாரமளிக்கப்பெற்ற எவரேனும் அலுவலர், ஏதேனும் சிறப்பு இல்லத்தில் கூர்நோக்கு இல்லத்தில் அல்லது பிற்காப்பு அமைப்பில் நுழைந்து அதனுடைய துறைகள் அனைத்திலும் அதனை மற்றும் அதற்குத் தொடர்பான வரைதாள்கள், பதிவேடுகள் மற்றும் கணக்குகள் அனைத்தையும் ஒரு முழுமையான ஆய்வு செய்யலாம், மற்றும் மாநில அரசாங்கத்திற்கு அத்தகைய ஆய்வின் அறிக்கையைப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

45/1860 58. இந்தச் சட்டத்தை ஒட்டி அமர்த்தப்பட்ட கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் பிற அலுவலர்கள், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 21இன் பொருளின்படி பொதுப்பணியாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**இந்தச் சட்டத்தின்படி அமர்த்தப்பட்ட அலுவலர்கள் பொதுப்பணியாளர்களாக இருத்தல்.**

2/1974 59. குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இன் அத்தியாயம் XXXIII இன் வகையங்கள் எந்த அளவுக்கு கூடுமோ அந்த அளவுக்கு, இந்தச் சட்டத்தின்படி பெறப்படும் முறிகளுக்குப் பொருந்துறுதல் வேண்டும்.

**முறிகள் பொறுத்த நெறிமுறை.**

60. மாநில அரசாங்கம், பொது அல்லது சிறப்பு ஆணையின் வாயிலாக, இந்தச் சட்டத்தின்படி அதனால் செலுத்தத்தக்க ஏதேனும் அதிகாரம், அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் சூழ்நிலைகள் மற்றும் வரைக்கட்டுகள், எவையேனுமிருப்பின், அவற்றிலும் அவற்றின் படியும், அந்த அரசாங்கத்திற்குக் கீழமைந்த ஓர் அலுவலராலும் கூடச் செலுத்தப்படத்தக்கதாகும் என்று பணிக்கலாம்.

**அதிகாரங்களை ஒப்படைவு செய்தல்.**

61. இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட எவையேனும் விதிகளை அல்லது ஆணைகளை ஒட்டி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக்கருதப்பட்ட எதனையும் பொறுத்து, மாநில அரசாங்கத்திற்கு அல்லது எவரேனும் கண்காணிப்பு அலுவலருக்கு அல்லது இந்தச் சட்டத்தின்படி அமர்த்தப்பட்ட பிற அலுவலருக்கு எதிராக உரிமைவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும், தொடரப்படுவதற்கு உற்றது ஆகாது.

**நல்லெண்ணத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.**

62. (1) மாநில அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளை வகுக்கலாம்.

**விதிகள் வகுப்பதற்கு அதிகாரம்.**

(2) குறிப்பாகவும், முன்சென்ற அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்கு ஊறு இன்றியும், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்காகவும் அல்லது அவற்றில் எதற்காகவும் அத்தகைய விதிகள் வகை செய்யலாம், அவையாவன,—

(அ) எந்த இடங்களில், எந்த நாட்களன்று, எந்த நேரத்தில் மற்றும் எந்த முறையில தகுதிறமுள்ள ஓர் அதிகாரஅமைப்பு அதனுடைய அமர்வுகளை நடத்தலாகுமோ அந்த இடங்கள், நாட்கள், நேரம் மற்றும் முறை ;

(ஆ) இந்தச் சட்டத்தின்படி விசாரணைகளைச் செய்வதில் தகுதிறமுள்ள ஓர் அதிகாரஅமைப்பால் பின்பற்றப்படவேண்டிய நெறிமுறை மற்றும் கேடுபயக்கும் நோய்களால் அல்லது மனநலக் குறையால் வருந்துகின்ற இளையோர்மீது நடவடிக்கை மேற்கொள்ளும்முறை ;

(இ) எந்தச் சூழ்நிலைகளில் மற்றும் எந்த வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, ஒரு நிறுவனம், ஒரு சிறப்பு இல்லமாக அல்லது ஓர் இளைஞருடைய இல்லமாக உறுதிச்சான்றளிக்கப்படுமோ அல்லது ஒரு கூர்நோக்கு இல்லமாக ஏற்பளிக்கப்படுமோ அந்தச் சூழ்நிலைகள் மற்றும் அந்த வரைக்கட்டுகள், மற்றும் அந்த உறுதிச்சான்றளித்தலை அல்லது ஏற்பளித்தலைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுதல் ;

(ஈ) சிறப்பு இல்லங்கள், இளைஞர் இல்லங்கள் மற்றும் கூர்நோக்கு இல்லங்களில் உள்மேலாண்மை மற்றும் அவர்களால் பேணிவரப்படவேண்டிய பணிகளின் தரங்கள் மற்றும் தன்மை;

(உ) சிறப்பு இல்லங்கள், இளைஞர் இல்லங்கள் மற்றும் கூர் நோக்கு இல்லங்களில் செயற்பணிகள் மற்றும் பொறுப்புகள் ;

(ஊ) சிறப்பு இல்லங்களை, இளைஞர் இல்லங்களை, கூர் நோக்கு இல்லங்களை மற்றும் பிற்காப்பு அமைப்புகளை ஆய்வுசெய்தல் ;

(எ) பிற்காப்பு அமைப்புகளின் நிறுவுகை, மேலாண்மை மற்றும் செயற்பணிகள்; எந்தச் சூழ்நிலைகளில் மற்றும் எந்த வரைக் கட்டுகளுக்கு உட்பட்டு ஒரு நிறுவனம், ஒரு பிற்காப்பு அமைப்பாக ஏற்பளிக்கப்படுமோ அந்தச் சூழ்நிலைகள் மற்றும் அந்த வரைக்கட்டுகள் மற்றும் பிரிவு 12இல் குறிப்பிடப் பட்டவாறான பிற பொருட்பாடுகள்;

(ஏ) கண்காணிப்பு அலுவலர்களின் தகுதிப்பாடுகள் மற்றும் கடமைகள் ;

(ஐ) இந்தச் சட்டததின் நோக்கங்களை நிறைவேற்றுவதற் காக அமர்த்தப்படும் ஆட்களைத் தெரிவுசெய்தலும், பயிற்சியும் மற்றும் அவர்களது பணி பற்றிய வரையுரைகளும் வரைக்கட்டுகளும்;

(ஒ) எந்த வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, புறக்கணிக்கப் பட்ட அல்லது குற்றமிழைத்த இளைஞர் ஒருவராக இருக்கிற ஒரு சிறுமிக்கு ஓர் இடத்திலிருந்து பிறிதொன்றுக்கு வழிக்காப்பாகச் செல்லலாமோ அந்த வரைக்கட்டுகள் மற்றும் எந்தப் பொருட்பாட்டில் ஓர் இளைஞர் தகுதிறமுள்ள ஓர் அதிகாரஅமைப்பின் அதிகாரவரம்புக்கு வெளியே அனுப்பப் படலாமோ அந்தப் பொருட்பாடு ;

(ஓ) எந்த முறையில் ஓர் இளைஞரின் பேணுகைக்காக பங்களிப்பு, ஒரு பெற்றோரால் அல்லது காப்பாளரால் செலுத்தப் படுமாறு ஆணையிடப்படுமோ அந்த முறை ;

(ஔ) எந்த அலுவலர்களால் அல்லது அதிகாரஅமைப்புகளால், எந்த முறையில் மற்றும் எந்த நோக்கத்திற்காக பிரிவு 52இன் படி தோற்றுவிக்கப்பட்ட நிதியம் நிருவகிக்கப்பட வேண்டுமோ அந்த அலுவலர்கள், அல்லது அதிகாரஅமைப்புகள், முறை மற்றும் நோக்கம் ;

(க) எந்த வரைக்கட்டுகளின் படி ஓர் இளைஞர் உரிமத்தின் மீது வெளியே தங்கவைக்கப்படலாமோ அந்த வரைக்கட்டுகள் மற்றும் அத்தகைய உரிமத்தின் படிவமும் வரைக்கட்டுகளும் ;

(ங) எந்த வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, இளையோர், இந்தச் சட்டததின்படி எவரேனும் பெற்றோரின், காப்பாளரின் அல்லது பிற தகுந்த ஆளின் அல்லது தகுந்த நிறுவனத்தின் காப்பின்கீழ் தங்கவைக்கப்படலாமோ அந்த வரைக்கட்டுகள் மற்றும் அவ்வாறு தங்கவைக்கப்பட்ட அந்த இளைஞர் பொறுத்த அத்தகைய ஆட்களின் அல்லது நிறுவனங்களின் கடமைப்பாடுகள் ;

(ச) வகுத்துரைக்கப்படுவதற்குள்ள, அல்லது வகுத்துரைக் கப்படும் ஏதேனும் பிற பொருட்பாடு.

(3) இந்தச் சட்டத்தின்படி ஒரு மாநில அரசாங்கத்தால் வகுக்கப் படும் ஒவ்வொரு விதியும், அது வகுக்கப்பட்ட பின்பு, கூடிய விரை வில், அந்த மாநிலத்தில் சட்டமன்றத்தின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்.

**நீக்கறவு மற்றும் காப்புரைகள்.**

63. ஏதேனும் மாநிலத்தில், இந்தச் சட்டம் செல்லாற்றல் பெறும் தேதியை ஒட்டி முன்பு, இந்தச் சட்டத்திற்கு நேரிணையான ஏதேனும் சட்டம் அந்த மாநிலத்தில் செல்லாற்றலில் இருக்குமாயின், அந்தச் சட்டம், மேற்சொன்ன தேதியன்று நீக்கறவுசெய்யப்பட்டு நிற்கும் :

ஆனால், அந்த நீக்கறவு—

(அ) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட ஏதேனும் சட்டத்தி முந்திய செயற்பாட்டை அல்லது அதன்படி உரியவாறு செய்யப்பட்ட அல்லது உட்பட்ட எதனையும், அல்லது

(ஆ) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட ஏதேனும் சட்டத்தின்படி பெறப்பட்ட, சேர்ந்தடைந்த அல்லது ஏற்கநேர்ந்த ஏதேனும் உரிமை, மதிப்புரிமை, கடமைப்பாடு அல்லது கடப்பாட்டுக்கு, அல்லது

(இ) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட ஏதேனும் சட்டத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட ஏதேனும் குற்றச்செயலைப் பொறுத்து ஏற்க நேர்ந்த ஏதேனும் தண்டத்தை, தண்ட இழப்பை அல்லது தண்டனையை, அல்லது

(ஈ) மேற்சொன்ன அத்தகைய உரிமையை, மதிப்புரிமையை, கடமைப்பாட்டை, கடப்பாட்டை, தண்டத்தை, தண்ட இழப்பை அல்லது தண்டனையைப் பொறுத்து ஏதேனும் புலனாய்வை சட்ட நடவடிக்கையை அல்லது தீர்வழியை,

பாதித்தல் ஆகாது. மற்றும் இந்தச் சட்டம் இயற்றப்படாதிருந்தாற் போன்றே, ஏதேனும் அத்தகைய புலனாய்வு, சட்ட நடவடிக்கை அல்லது தீர்வழி தொடரப்படலாம். தொடர்ந்து இருந்துவரலாம் அல்லது செய லுறுத்தப்படலாம் மற்றும் ஏதேனும் அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை சுமத்தப்படலாம்.

The above translation in Tamil of the Juvenile Justice Act, 1986 has been authorised by the president to be published in the Official Gazette under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 19273

*Secretary to Government of India.*

இளைஞர் நீதிச்சட்டம், 1986 இன் மேலேயுள்ள தமிழ் மொழி பெயர்ப்பானது, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் பிரிவு 2 இன் கூறு (அ)இன் கீழ் அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படுவதற்க்குக்குடியரசுத் தலைவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது

இந்திய அரசாங்கச் செயலாளர்.